வீடமைப்புக் கடன் பிரிவு	உதவிக் கண்காணிப்பாளர்	திரு. எம் கே என் டி தர்மதாச
மீளளிப்புக் கட்டுப்பாட்டுப் பிரிவு	மூத்த உதவிக் கண்காணிப்பாளர்	திருமதி. டபிள்யு ஜி ஏ சி த சில்வா
	உதவிக் கண்காணிப்பாளர்	திருமதி. பி வி எம் சிறிவர்த்தன
மீளளிப்புக் கொடுப்பனவுப் பிரிவு	உதவிக் கண்காணிப்பாளர்	திருமதி. ஜி ஜி என் எம் பெரேரா
	உதவிக் கண்காணிப்பாளர்	திருமதி. பி பிரேமசிறி
பொதுமக்கள் தொடர்புகள், விசாரணைகள் பீடம் மற்றும் அழைப்பு நிலையம்	மூத்த உதவிக் கண்காணிப்பாளர்	திரு. பி டபிள்யு விமல் சாந்த

ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு

ஊழியர் சேமலாப நிதியமானது (ஊ.சே.நிதியம்) 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊ.சே. நிதியச் சட்டத்தின் (சட்டம்) கீழ், ஓய்வூதிய நன்மைகளுக்கு உரிமையில்லாத தனியார் மற்றும் அரச சார் துறைகளிலுள்ள ஊழியர்களுக்காக ஒரு கட்டாய வரையறுக்கப்பட்ட பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமாக நிறுவப்பட்டது. சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி, தொழில் ஆணையாளர் நிதியத்தின் பொது நிர்வாகியாகச் செயற்படுகின்ற வேளையில் நிதியத்தின் கட்டுக்காப்பாளராகச் செயற்படுவதற்கான அதிகாரம், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சட்டத்தின் மூலம் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே.நிதியத் திணைக்களம் வசதியளிக்கின்றது.

நிதியத்தின் உறுப்பினர்களுக்கான குறைந்தபட்ச கட்டாயப் பங்களிப்பு வீதமானது அவர்களுடைய தொழிலின் மொத்த மாதாந்த வருவாயில் 20 சதவீதமாகும். தொழில்தருநர்களும் ஊழியர்களும் (உறுப்பினர்கள்) ஊ.சே. நிதியத்திற்கு உறுப்பினரின் மாதாந்த மொத்த வருவாயில் குறைந்தபட்சம் முறையே 12 சதவீதத்தினையும் 8 சதவீதத்தினையும் பங்களிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி தொழில்தருநர்கள் அவர்களுடைய ஊழியர்களுக்கான ஊ.சே.நிதியப் பங்களிப்புக்களைச் செலுத்துவதற்கு பொறுப்புடையவர்களாவர்.

நிதியத்தின் உறுப்பினர்கள் ஓய்வுபெறும் வயதான பெண்கள் 50 வயதினையும் ஆண்கள் 55 வயதினையும் அடைந்ததும் அவர்களது ஓய்வூதிய நன்மைகளை (பங்களிப்புக்கள் மற்றும் வட்டி) மீளப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராவர். மேலும், புலம்பெயர்தல், நிரந்தரமாக ஊனமடைதல், திருமணம் காரணமாக தொழிலிலிருந்து விலகுதல் (பெண் உறுப்பினர்களுக்கு மாத்திரம்) மற்றும் ஓய்வூதியம் பெறத்தக்க தொழில்களில் இணைந்து கொள்ளுதல் போன்ற பல்வேறு சந்தர்ப்பங்களில் உறுப்பினர்களின் தமது ஊ.சே.நிதியக் கணக்குகளிலுள்ள நிலுவைகளைப் பெற்றுக்கொள்ள உரித்துடையவராவர். மேலும், இறந்த உறுப்பினர்களின் சட்ட ரீதியான வாரிசுகள் ஒரு உறுப்பினரின் மரணத்தின் போது நன்மைகளைப் பெற்றுக்கொள்ள உரித்துடையவராவர். ஓய்வூதிய நன்மைகளுக்குப் புறம்பாக, ஊ.சே.நிதியமானது உறுப்பினர்களுக்கு வீடமைப்பு நோக்கங்களுக்காக அவர்களுடைய கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ள நிலுவைகளை பிணையாக வைத்து, ஐந்து ஒப்புதலளிக்கப்பட்ட கடன்வழங்கல் நிறுவனங்களிலிருந்து கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியளிக்கின்றது. மேலும், 2012ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஊ.சே. நிதிய (திருத்தச்) சட்டத்தின்படி, 10 ஆண்டுகளுக்கும் கூடுதலாகப் பணிபுரிந்து ரூ.300,000 இலும் தொகையினை ஊ.சே.நிதியத்தின் கணக்கு நிலுவையில் வைத்திருக்கும் ஊழியர்கள் 2015இலிருந்து வீடமைப்பு அல்லது மருத்துவச் சிகிச்சை நோக்கங்களுக்காக அவர்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகையில் 30 சதவீதமான அதிகூடிய தொகையாக ரூ.2 மில்லியனை மீளப்பெற்றுக்கொள்ள உரித்துடையவராவர்.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது தொழிற்பாடுகள்



உறுப்பினர் பங்களிப்புக்கள், தண்டப் பணங்கள் மற்றும் வருமானம் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளுதல்.



உறுப்பினர் கணக்குகளைப் பேணுதல் மற்றும் தனிப்பட்ட கணக்குகளின் வருடாந்தக் கூற்றுக்களை உறுப்பினர்களுக்கு வழங்குதல்.



உறுப்பினர்களுக்கு உயர்ந்தபட்ச வருவாயை வழங்கும் விதத்தில் மிகையான நிதியங்களை முதலீடு செய்யும் அதேவேளையில் நிதியத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.



மாண்புமிகு தொழில் அமைச்சர் மற்றும் மாண்புமிகு நிதி அமைச்சர் ஆகியோரின் சம்மதத்துடன் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஒரு வீதத்தில் உறுப்பினர் கணக்குகளுக்கு ஆண்டு வட்டியை வரவு வைத்தல்.



பொதுக் கணக்குகளைப் பேணுதல் மற்றும் ஆண்டுக் கணக்குகளைத் தயாரித்தல்.



தொழில் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தீர்மானக் கடிதங்களிற்கிணங்க மீளளிப்பு நன்மைகளை மேற்கொள்ளுதல்.



உறுப்பினர்கள் வீடமைப்புக் கடன்களைப் பெறுவதற்கு வசதியளிக்கும் விதத்தில் தொடர்பான கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு உறுப்பினர் நிலுவைகள் தொடர்பான சான்றிதழ்களை வழங்குதல்.



ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலிருந்து 3 மாதங்களுக்குள் மாண்புமிகு தொழில் அமைச்சருக்கும் மாண்புமிகு நிதி அமைச்சருக்கும் நிதியியல் கூற்றுக்கள் மற்றும் முதலீட்டுக் கூற்றுக்கள் போன்ற தகவல்களைச் சமர்ப்பித்தல்.



உறுப்பினர் கணக்குகளிலுள்ள பெயர்களை அவர்களது தேசிய அடையாள அட்டையில் காணப்படுகின்றவாறு மீளப்பதிவு செய்தல்.



தொழில் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தீர்மானக் கடிதங்களிற்கிணங்க 30 சதவீத மீளளிப்புக்களை மேற்கொள்ளுதல்.



உறுப்பினர் கணக்குகள், உறுப்பினர் பெயர்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் என்பவற்றின் பிழைகளைத் திருத்துதல்.

தொழில் ஆணையாளரின் தொழிற்பாடுகள்



தொழில்தருநர்களையும் தொழிலாளர்களையும் நிதியத்தில் பதிவுசெய்தல்.



தொழில்தருநர்களிடமிருந்து அறவிடமுடியாத பங்களிப்புக்களைப் பெற்றுக்கொள்ளல்.



தொழிலாளர்களுக்கு நன்மைகளின் கொடுப்பனவுகளிற்கான கொடுப்பனவுக் கட்டளைகளை வழங்குதல்.



ஒப்புதலளிக்கப்பட்ட சேமலாப நிதியங்களை மேற்பார்வை செய்தல்.



ஊ.சே. நிதியத்தின் முன்னேற்றத்திற்கான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்.



பிரிவு ஆ

கம்பனி பொதுநோக்கு




எமது தொலைநோக்கு


"எமது உறுப்பினர்கள் ஒரு நிறைந்த ஓய்வுகால வாழ்க்கையை வாழச் செய்வதனை இயலச்செய்யும் விதத்தில் இப்பிராந்தியத்தில் மிக அக்கறை கொண்ட ஓய்வுகால நிதியமாகத் திகழச் செய்தல்"

எமது பணி


"முன்மதியும்
நவீனத்துவமும் கொண்ட
முகாமைத்துவத்தினூடாக
எமது உறுப்பினர்களுக்கு
உயர்ந்தபட்ச ஓய்வுகால
நன்மைகளையும்
வினைத்திறன்மிக்க
பணிகளையும் வழங்குதல்"



பயணத்தின் மைல்கற்கள்



தொழில் நிலைச்சக்கரம்





நிதியியல்


முக்கிய அம்சங்கள் - 2019





வரைபடம் 01

நிதியத்தின் வளர்ச்சி




	2015	2016	2017	2018	2019
மொத்தத் தேறிய சொத்துக்கள் (ரூ. பில்)	1,665	1,841	2,066	2,289	2,540
வளர்ச்சி வீதம் (%) (வலது அச்சு)	12.0	10.6	12.2	10.8	11.0

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 02

பங்களிப்புக்கள், மீளளிப்புக்கள் மற்றும் தேறிய பங்களிப்புக்கள்




	2015	2016	2017	2018	2019
பங்களிப்புக்கள் (ரூ. பில்)	102.5	118.3	133.4	145.0	157.2
மீளளிப்புக்கள் (ரூ.பில்)	77.8	108.4	117.5	108.0	126.3
தேறிய பங்களிப்புக்கள் (ரூ. பில்)	24.7	9.9	15.9	37.0	30.9

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 03

உறுப்பினர் கணக்குகளின் எண்ணிக்கை



	2015	2016	2017	2018	2019
பங்களிப்பவை (மில்)	2.6	2.6	2.8	2.9	2.9
பங்களிக்காதவை (மில்)	14.3	14.7	15.3	15.9	16.5

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 04

முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் உள்ளமைப்பு




வகை	2015	2016	2017	2018	2019
அரச பிணையங்கள் (சதவீதம்)	92.7	93.1	91.3	92.2	93.8
பங்குரிமை (சதவீதம்)	5.5	4.6	4.2	3.3	3.0
தொகுதிக்கடன்கள் மற்றும் ஏனையவை (சதவீதம்)	1.8	2.3	4.5	4.5	3.2

அரச பிணையங்கள் பங்குரிமை தொகுதிக் கடன்கள் மற்றும் ஏனையவை

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 05

சராசரி முதலீட்டுச் சொத்துப்பட்டியல் மீதான வருவாய்




	2015	2016	2017	2018	2019
மொத்த முதலீட்டு வருமானம் (ரூ. பில்)	171.5	192.9	222.6	222.4	259.0
முதலீட்டு மீதான வருவாய்(%) (வலது அச்சு)	11.3	11.4	11.8	10.4	10.7

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 06

உறுப்பினர் நிலுவைகளின் மீது செலுத்தப்பட்ட வட்டி




	2015	2016	2017	2018	2019
செலுத்தப்பட்ட வட்டி (ரூ.பில்.)	154.2	171.6	191.2	194.6	210.4
வட்டி வீதம் (%) (வலது அச்சு)	10.5	10.5	10.5	9.5	9.25

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 07

உறுப்பினர் நிலுவைகளுக்கான வருவாயின் பயனுறு வீதம் எதிர் சந்தை வீதங்கள்



மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி
ஆண்டறிக்கை - 2019, இலங்கை மத்திய வங்கி



தொழிற்பாட்டின் முக்கிய அம்சங்கள் 2019

2019 காலப்பகுதியில் முதலீடுகள்

திறைசேரி முறிகளில் ரூ.373.8 பில்லியன்

திறைசேரி உண்டியல்களில் ரூ.7.6 பில்லியன்

தொகுதிக்கடன் பத்திரங்களில் ரூ.3.3 பில்.

நிலையான வைப்புக்களில் ரூ.46.0 பில்லியன்

2019 இறுதியில் எண் தொகைகள்:

- உறுப்பினர் கணக்குகள் - 19.4 மில்லியன்
- பங்களிக்கின்ற உறுப்பினர் கணக்குகள் - 2.9 மில்லியன்
- தொழில்தருநர்கள் - 94,171
- தேசிய அடையாள அட்டையின் பெயர்களின்படி மீளப் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் - 1.98 மில்லியன்
- வீடமைப்புக் கடன் உத்தரவாதச் சான்றிதழ்களை பெற்றவர்களின் எண்ணிக்கை - 10,022 உறுப்பினர்கள்

ஓய்வுகால நன்மைகள்:

- பெறுமதி - ரூ.126.3 பில்லியன்
- நன்மை பெறுநர்களின் எண்ணிக்கை - 241,581

ஓய்வுகாலத்திற்கு முன்னைய நன்மைகள்:

- பெறுமதி - ரூ.15.2 பில்லியன்
- நன்மை பெறுநர்களின் எண்ணிக்கை - 29,646

இ-திரட்டு முறைமை:

- பதிவுசெய்யப்பட்ட தொழில்தருநர்களின் எண்ணிக்கை - 9,267 (2019 இறுதியளவில்)
- செயற்படுகின்ற உறுப்பினர் கணக்குகளில் 79 சதவீதம்
- மொத்த மாதாந்த ஊ.சே. நிதியப் பங்களிப்புக்களில் 88 சதவீதம்

தொழில்தருநர், உறுப்பினர் மற்றும் ஏனைய ஆர்வலர்கள் தொடர்பான விசாரணைகள்:

- வருகைதந்தோர் - 156,898
- கடிதங்கள் - 84,550
- அழைப்புக்கள் - 77,310
- மின்னஞ்சல்கள் - 8,713

விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்:

- முக்கிய நிகழ்ச்சித்திட்டங்கள் - 02
- நடமாடும் பணிகள் - 16

தொழில் திணைக்களம்:

- நடமாடும் சேவைகளை நாடளாவிய ரீதியில் நடத்தியமை, துண்டுப்பிரசுரங்களின் விநியோகம் மற்றும் ஊ.சே.நிதிய உறுப்பினர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்காக பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்
- சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தொலைக்காட்சி மற்றும் வானொலி விளம்பரங்களூடாக பொதுமக்களிடையே விழிப்புணர்வினை உருவாக்குதல்


1

பொருளாதார மீளாய்வு 2019

1.1 பொருளாதார வளர்ச்சி மற்றும் பேரண்டப் பொருளாதார நிலைமைகள்

இலங்கையின் பொருளாதாரம் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 3.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 2.3 சதவீதமான ஒரு மிதமான வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. மொ.உ.உற்பத்தியில் 57.4 சதவீதத்திற்கு வகைகூறும் பணிகள் துறையானது, 2018இன் 4.6 சதவீதம் கொண்டதொரு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 2.3 சதவீதமானதொரு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. 2019 ஆண்டுப்பகுதியில் பணிகள் துறையின் வளர்ச்சியில் ஏற்பட்டதொரு மந்தநிலைக்கு சுற்றுலாவுடன் தொடர்பான நடவடிக்கைகள் மீதான உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் விளைவே காரணமாகும். மொ.உ.உற்பத்தியில் 26.4 சதவீதத்தினை வகைகூறுகின்ற கைத்தொழில் துறையானது, முன்னைய ஆண்டின் 1.2 சதவீதம் கொண்டதொரு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 2.7 சதவீதம் கொண்டதொரு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. முக்கியமாக, கட்டடவாக்கம் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் புடைவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் மற்றும் உணவுகளின் தயாரிப்பு என்பனவற்றின் வளர்ச்சி கைத்தொழில் துறையின் வளர்ச்சிக்கு ஆதரவாக அமைந்தன. அதேவேளையில், மொ.உ.உற்பத்தியில் 7.0 சதவீதத்திற்கு வகைகூறும் வேளாண்மைத் துறையானது பாதகமான காலநிலையினால் ஏற்பட்ட அதிர்ச்சிகளின் விளைவாக 2018இன் 6.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 0.6 சதவீதத்திற்கு ஒரு மிதமான வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

வரைபடம் 08 உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சி




மூலம்: ஆண்டறிக்கை - 2019, இலங்கை மத்திய வங்கி

1.2 பணவீக்கம் மற்றும் வட்டி வீதங்கள்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொ.நு.வி. சுட்டெண்) ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்படுகின்ற முதன்மைப் பணவீக்கம் 2018 இறுதியின் 2.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019 இறுதியில் 4.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. கொ.நு.வி. சுட்டெண்ணினால் அளவிடப்படுகின்ற முதன்மைப் பணவீக்கத்தின் அசைவானது பிரதானமாக உணவுப் பணவீக்கத்தையே பிரதிபலிக்கின்றது. 2020 யூனிலிருந்து ஓகத்து வரையான காலப்பகுதியில் ஏற்பட்ட தளர்வுகளுக்கு முன் 2020 பெப்புருவரியில் கொ.நு.வி. சுட்டெண்ணின் 6.2 சதவீதத்தை நோக்கிய விரைவான அதிகரிப்பிற்கு உணவுப் பணவீக்கமே காரணமாகும். அதன் பின்னர், இரண்டாம் அரையாண்டில் ஏற்பட்ட பாதகமான காலநிலை நிலைமைகளின் விளைவாக உள்நாட்டு உணவுப்பொருட்களின் வழங்கலில் ஏற்பட்ட தடைகள் கொ.நு.வி. சுட்டெண்ணை ஏறத்தாழ 5.0 சதவீத மட்டத்திற்கு வைத்திருந்தது. அதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் (தே.நு.வி.சு) அளவிடப்படுகின்ற ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமானது 2018இன் இறுதியிலிருந்த 0.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019 திசெம்பரில் 6.2 சதவீதத்திற்கு வேகமாக அதிகரித்தது. தே.நு.வி. சுட்டெண்ணில் உணவுப்பொருட்களுக்கு அதிக நிறையிடப்பட்டமையாலும் உணவுப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாகவும் தே.நு.வி. சுட்டெண் கொ.நு.வி.சுட்டெண்ணினை விட பணவீக்கத்தில் உயர்வானதொரு அதிகரிப்பைப் பதிவுசெய்தது.

வரைபடம் 09 ஆண்டிற்கு ஆண்டு பணவீக்கம் (கொநுவிசு மற்றும் தேநுவிசு: 2013=100 இனை அடிப்படையாகக் கொண்டது)




மூலம்: ஆண்டறிக்கை - 2019, இலங்கை மத்திய வங்கி

அதேவேளை, பணவீக்கத்தின் அடிப்படைப் போக்குகளைப் பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது 2019இல் பரந்தளவில் நிலையாக இருந்தது. கொ.நு.வி. சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கம் 2018இன் இறுதியில் காணப்பட்ட 3.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2019 திசெம்பரில் 4.8 சதவீதமாக அமைந்தது. 2018 இறுதியில் 3.1 சதவீதமாகக் காணப்பட்ட தே.நு.வி. சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு மையப் பணவீக்கம் 2019 இறுதியில் 5.2 சதவீதமாக அதிகரித்தது.

1.3 நாணயம் மற்றும் இறைக் கொள்கை

இலங்கை மத்திய வங்கியானது குறைந்த பொருளாதார வளர்ச்சி, குறைந்த பணவீக்கம், சாதகமான பணவீக்கத் தோற்றப்பாடு மற்றும் குறைவடைந்து வருகின்ற தனியார் துறையின் கொடுகடன் ஆகியவற்றின் ஆதரவுடன் 2019இல் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைப் பின்பற்றியது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின்

வரைபடம் 10 வர்த்தக வங்கிகளின் கடன்வழங்கல் மற்றும் வைப்பு வீதங்கள்



மூலம்: ஆண்டறிக்கை - 2019, இலங்கை மத்திய வங்கி

அனைத்து ரூபாய் வைப்புப் பொறுப்புக்களுக்கும் பிரயோகிக்கப்படுகின்ற நியதி ஒதுக்கு வீதத்தினை உள்நாட்டுப் பணச் சந்தையில் தொடர்ந்து காணப்படுகின்ற பற்றாக்குறை அளவுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் 2019 மார்ச்சில் 1 சதவீதப் புள்ளியினால் குறைத்தது. இலங்கை மத்திய வங்கியானது, கொள்கை வட்டி வீதங்களில் ஒரு குறைவு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் தொடர்பில் முன்னோக்கிய வழிகாட்டல் ஒன்றினை வழங்கி, துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் ஒவ்வொன்றும் 2019 மேயில் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 7.50 சதவீதத்திற்கும் 8.50 சதவீதத்திற்கும் குறைத்தது. ஓகத்தில் இலங்கை மத்திய வங்கி துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினை மேலும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் முறையே 7.0 சதவீதத்திற்கும் 8.0 சதவீதத்திற்கும் குறைத்தது. நாணயக் கொள்கையினைத் தளர்த்தும் பொருட்டு சந்தை வட்டி வீதங்களின் மீதான மெதுவான சீராக்கங்களினால் மேலும் கொள்கை வட்டி வீதங்களின் குறைப்பானது துரிதப்படுத்தப்பட்டது. சந்தை வட்டி வீதங்களை கீழ் நோக்கிச் சீராக்குவதற்கு வைப்புக்களின் வட்டி வீதத்தின் உயர்ந்த வைப்பு வீதங்களின் உச்சவரம்பு எல்லையினை விதிக்கவும் இலங்கை மத்திய வங்கி நிர்ப்பந்திக்கப்பட்டது.

தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையைப் பிரதிபலிக்கும் விதத்தில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் 2018 இறுதியின் 8.95 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 7.45 சதவீதத்திற்கு 150 அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் வைப்பு வட்டி வீதங்களைப் பிரதிபலிக்கின்ற சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதமானது தடையாக இருந்ததனால் 2019 ஏப்பிறல் இறுதியின் 8.97 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 8.20 சதவீததிற்கு 77 அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தது. கொள்கை வட்டி வீதங்கள் குறைக்கப்பட்ட போதிலும், கடுமையான கீழ்நோக்கிய நிலையிலிருந்த கடன்வழங்கல் வீதங்கள் 2019 செத்தெம்பரில் கடன்வழங்கல் வீதங்களின் மீது விதிக்கப்பட்ட உச்ச எல்லையினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. இதற்கிணங்க, அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் ஒரு வார காலத்தில் அவற்றின் முதன்மை வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட குறுங்காலக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீது பிரயோகிக்கத்தக்க வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும் வாராந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதமானது 2018 இறுதியில் பதிவுசெய்யப்பட்டிருந்த 12.09 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 9.74 சதவீதத்திற்கு 235 அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட அனைத்து வெளிநின்ற

கடன்கள் மற்றும் முற்பணங்களின் வட்டி வீதங்களை அடிப்படையாகக் கொண்ட சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் 2019ஆம் ஆண்டில் 13.59 சதவீதத்திற்கு 81 அடிப்படைப் புள்ளிகளால் வீழ்ச்சியடைந்தது.

இறைக் கொள்கையானது அரசிறையின் வீழ்ச்சி மற்றும் அரச செலவினத்தின் ஒரு அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாக 2019இல் இறைத் திரட்சி குறிப்பிடத்தக்களவு சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. 2019 ஏப்பிறல் 5ஆம் திகதி ஒப்புதலளிக்கப்பட்ட 2019இற்கான அரச வரவு செலவுத்திட்டமானது மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை 2018இன் 5.3 சதவீதத்திலிருந்து 2019இல் 4.4 சதவீதமாகக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இருப்பினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2018இன் 5.3 சதவீதத்திலிருந்து 2019இல் 6.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொ.உ.உற்பத்தியின் ஒரு சதவீதமான அரசிறையானது 2018இன் 13.4 சதவீதத்திலிருந்து 2019இல் 12.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான கலால் தீர்வைகள், பெறுமதிசேர் வரி, துறைமுகம் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தித் தீர்வை என்பவற்றிலிருந்தான வரி வருமானம் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். அதேவேளை, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்தச் செலவுகளும் தேறிய கடன்களும் 2018இன் 18.7 சதவீதத்திலிருந்து 2019இல் 19.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.

வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில், உள்நாட்டு வளங்கள் மூலமே பெருமளவில் நிதியிடப்பட்டது. இதற்கிணங்க, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையின் 69.1 சதவீதம் தேறிய உள்நாட்டு நிதியிடல் மூலமும் ஏனையவை வெளிநாட்டு நிதியிடல் மூலமும் சரிசெய்யப்பட்டது. உள்நாட்டு வளங்களைக் கொண்ட தேறிய நிதியிடல் 2018இன் ரூ.437.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019இல் ரூ.702.4 பில்லியனிற்கு 60.6 சதவீதத்தினால் அதிகரித்தது. உள்நாட்டு நிதியிடலில், வங்கியல்லாத் துறையிலிருந்து பெற்ற கடன்கள் 2018இன் 75.0 சதவீதத்துடன் (ரூ.327.8 பில்லியன்) ஒப்பிடுகையில் 2019இல் தேறிய உள்நாட்டு நிதியிடலின் 72.5 சதவீதமாக (ரூ.509.3 பில்லியன்) வகைகூறியது. வங்கித்தொழில் துறையிலிருந்தான நிதியிடல், 2018இல் பதிசெய்த 25 சதவீதத்துடன் (ரூ.190.5 பில்லியன்) ஒப்பிடுகையில் 2019இல் 27.5 சதவீதமாக (ரூ.193.1 பில்லியன்) வகைகூறியது.

1.4 கூலிகள் மற்றும் தொழிலின்மை


ஒட்டுமொத்த தொழிலின்மை வீதம் 2018இன் 4.4 சதவீதத்திலிருந்து 2019இல் 4.8 சதவீதமாக அதிகரித்தது. இதற்கு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் நாட்டில் நிலவிய மந்தமான பொருளாதார நிலைமைகளே பிரதான காரணமாகும். ஆண்டுப்பகுதியில் ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்குமான தொழிலின்மை வீதம் அதிகரித்துள்ளது.

2019 காலப்பகுதியில் பொதுத் துறை, முறைசார்ந்த மற்றும் முறைசாரா தனியார் துறைகளின் பெயரளவுக் கூலிகள் உயர்வடைந்துள்ளன. 2018 உடன் ஒப்பிடுகையில் பொதுத் துறை கூலி வீதச் சுட்டெண்ணின் (2016 = 100) ஆண்டுச் சராசரி மாற்றத்தினால் அளவிடப்படுகின்ற பொதுத் துறை ஊழியர்களின் பெயரளவு கூலிகள் 2019இல் 4.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. கூலி நிர்ணய சபையினால் ஆளப்படுகின்ற கூலிகளையுடைய ஊழியர்களின் குறைந்தபட்ச கூலி வீதச் சுட்டெண்ணின் (1978 திசெம்பர் = 100) ஆண்டுச் சராசரி மாற்றத்தினால் அளவிடப்படுகின்ற முறைசார் தனியார் துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் 2019இல் 2.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அதேவேளை, முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண்ணின் (2012 = 100) ஆண்டுச் சராசரி மாற்றத்தினால் அளவிடப்படுகின்ற முறைசாரா தனியார் துறை ஊழியர்களின் பெயரளவுக் கூலிகள் முன்னைய ஆண்டின் 13.2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2019இல் 6.2 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது. பொது மற்றும் முறைசாரா தனியார் துறைகளின் உண்மைக் கூலிகள் சிறிதளவில் அதிகரித்த அதேவேளை, 2018 உடன் ஒப்பிடுகையில் முறைசார் தனியார் துறைக் கூலிகள் குறைவொன்றினைக் காட்டியது.

1.5 அரச பிணையங்கள் சந்தையும் விளைவு வீதங்களின் அசைவுகளும்


தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை, திரவத்தன்மை மிகை, 2019ஆம் ஆண்டின் மார்ச் மற்றும் யூன் மாதங்களின் பன்னாட்டு முறிகளின் வழங்கலினூடாக பெறுகைகளுடன் வெளிநாட்டு நிதியிடலின் கிடைக்கும் தன்மை மற்றும் குறைந்த பணவீக்கம் ஆகியவற்றின் பிரதிபலிப்பினூடாக இந்த ஆண்டின் அரச பிணையங்கள் மீதான விளைவில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைத் தோற்றுவித்தன. 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் திறைசேரி உண்டியல்கள் மீதான முதலாந்தரச் சந்தை விளைவுகள் 2019 ஆண்டுப்பகுதியில் 250 அடிப்படைப் புள்ளிகளினாலும் 197 அடிப்படைப் புள்ளிகளினாலும் மற்றும் 275 அடிப்படைப் புள்ளிகளினாலும் முறையே 7.51 சதவீதத்திற்கும் 8.02 சதவீதத்திற்கும் 8.45 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, 2019ஆம் ஆண்டுப்பகுதியில் முதலாந்தரச் சந்தையில் நீண்ட கால முதிர்ச்சிகளின் மீதான விளைவுகள் ஏறத்தாழ 131 - 200 அடிப்படைப் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளை குறுங்காலத்திலிருந்து நடுத்தர காலம் வரையான முதிர்ச்சிகளின் விளைவுகள் ஏறத்தாழ 182 - 223 அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்து முதலாந்தரச் சந்தையில் திறைசேரி முறிகள் மீதான விளைவுகளிலும்

வரைபடம் 11 இரண்டாந்தரச் சந்தை விளைவு வீதங்கள்



மூலம்: ஆண்டறிக்கை - 2019, இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 12 அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் மற்றும் ஸ்டான்ட்ட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண்ணின் அசைவுகள்



மூலம்: புளூம்பேர்க்

கணிசமாக வீழ்ச்சியை ஏற்படுத்தியது. 2019ஆம் ஆண்டு முதலரையாண்டு காலப்பகுதியில் அரசாங்கம், குறுகிய காலத்திலிருந்து நடுத்தர காலம் வரையிலான திறைசேரி முறிகளை வழங்குவதிலேயே பெருமளவில் தங்கியிருந்த வேளையில், 2019ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டு காலப்பகுதியில் 10 - 20 ஆண்டுகளைக் கொண்ட நீண்ட கால முதிர்ச்சிகளைக் கொண்ட திறைசேரி முறிகள் அதிகமாக வழங்கப்பட்டன.

முதலாந்தரச் சந்தை விளைவுகளின் ஒட்டுமொத்த கீழ் நோக்கிய சீராக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், குறுங்காலத்திலிருந்து நடுத்தர கால விளைவுகளில் மிகப்பெரும் கீழ் நோக்கிய நகர்வினால் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் அரச பிணையங்களிற்கான இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையி கீழ் நோக்கி நகர்ந்தது.

1.6 கம்பனிப் படுகடன் சந்தை

கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் 2019ஆம் ஆண்டில் 15 கம்பனிகளால் 30 கம்பனி தொகுதிக் கடன் பத்திரங்கள் வழங்கப்பட்டதானது 2018இன் ரூ.55.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் தொகுதிக் கடன்கள் 2019ஆம் ஆண்டில் ரூ.57.9 பில்லியனாக அதிகரித்தது. கம்பனித் தொகுதிக் கடன் பத்திரங்களை கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பதிவுசெய்த 15 கம்பனிகளில் 10 கம்பனிகள், வங்கிகளையும் ஏனைய நிதி நிறுவனங்களையும் உள்ளடக்கியுள்ளன. இத்தொகுதிக் கடன் பத்திரங்கள் மீது வழங்கப்பட்ட நிலையான வட்டி வீதங்கள் முன்னைய ஆண்டின் 12.00 - 14.75 சதவீத வீச்சுகளுடன் ஒப்பிடுகையில் 12.30 - 15.50 சதவீத வீச்சிற்குள் காணப்பட்டன.

1.7 கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை

அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 5.0 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 1.3 சதவீதமாக வளர்ச்சியடைந்துள்ள அதேவேளை, ஸ்ராண்டட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண் 2018இல் பதிவுசெய்யப்பட்ட 14.6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 6.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னரான உடனடி விளைவாக, அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 5,200 இற்குக் குறைவடைந்து 3.6 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இருப்பினும், இரண்டாம் அரையாண்டு காலப்பகுதியில், முக்கியமாக சனாதிபதித் தேர்தல் காரணமாக ஏற்பட்ட முதலீட்டாளர்களுடைய நேர்மனநிலை காரணமாக, பங்குச் சந்தை படிப்படியாக முன்னேற்றமடைந்தது. 2018இல் ரூ.2,839.5 பில்லியனாகக் காணப்பட்ட சந்தை மூலதனமயமாக்கல் 2019ஆம் ஆண்டு இறுதியில் 0.4 சதவீதத்தினால் ரூ.2,851.3 பில்லியனிற்கு மெதுவாக உயர்வடைந்தது. 2019ஆம் ஆண்டு இறுதியில் மொ.உ.உற்பத்தியின் 21.5 சதவீதமாக சந்தை மூலதனமயமாக்கல் காணப்பட்டது. வெளிநாட்டு நிதிகளின் வெளிப்பாய்ச்சல் இரண்டாவது அடுத்தடுத்த ஆண்டும் தொடர்ச்சியாகக் காணப்பட்டதோடு 2019இல் இதன் பெறுமதி ரூ.11.7 பில்லியனாகக் காணப்பட்டது. 18 உரிமை வழங்கல்களூடாக முதலாந்தரச் சந்தையில் ரூ.31 பில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டது. இருப்பினும், இவ்வாண்டு காலப்பகுதியில் எந்தவொரு ஆரம்ப பொது வழங்கல்களும் இடம்பெறவில்லை.

2

ஊ.சே. நிதியச் செயலாற்றத்தின் மீளாய்வு - 2019

2. அறிமுகம்

நிதியத்தின் மொத்தத் தேறிய சொத்துக்கள் 2019 இறுதியில் ரூ.2,540.4 பில்லியனை அடைந்து 2018 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.2,289.4 பில்லியனை விட 11.0 சதவீதம் கொண்டதொரு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2019 இறுதியில் 19.39 மில்லியனாகக் காணப்பட்டது. 2019 இறுதியில் பங்களிக்கின்ற உறுப்பினர் கணக்குகளின் எண்ணிக்கை 2.91 மில்லியனாகக் காணப்பட்டதுடன் 2018இன் 2.85 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 2.3 சதவீதமானதொரு அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. அதேவேளை, பங்களிக்காத உறுப்பினர் கணக்குகள் 2018இன் 15.85 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 இறுதியில் 16.45 மில்லியனாகக் காணப்பட்டது. அதேவேளை, பங்களிக்கின்ற தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2018 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 86,203 இலிருந்து 2019 இறுதியில் 94,171 இற்கு 9.2 சதவீதமானதொரு அதிகரிப்பினைப் பதிவுசெய்துள்ளது.

2.1 உறுப்பினர் பங்களிப்புக்கள் மற்றும் ஓய்வுகால நன்மைகளின் கொடுப்பனவுகள்

2019ஆம் ஆண்டுப்பகுதியில், உறுப்பினர் பங்களிப்புக்கள் 2018ஆம் ஆண்டுப்பகுதியின் ரூ.145.0 பில்லியனிலிருந்து ரூ.157.2 பில்லியனுக்கு 8.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2019 காலப்பகுதியில் 30 சதவீத ஓய்விற்கு முன்னரான மீளளிப்புக்கள் உட்பட உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்டபூர்வமான வாரிசுகளுக்கும் மீளளிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.126.3 பில்லியனாக விளங்கி 2018இல் மீளளிக்கப்பட்ட ரூ.108.0 பில்லியனை விட 17.0 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. 2019இல் செய்யப்பட்ட மீளளிப்புக்களின் மொத்த எண்ணிக்கை 241,581 ஆகும். இது 2018ஆம் ஆண்டுப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 241,190 உடன் ஒப்பிடுகையில் 0.2 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். இதன்படி, தேறிய பங்களிப்பு (மீளளிப்புக்களைக் கழித்த மொத்தப் பங்களிப்புக்கள்) முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.37.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.30.9 பில்லியனுக்கு 16.4 சதவீதத்தினால் குறைவடைந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2019இல் தேறிய பங்களிப்பில் வீழ்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்டமைக்கு பங்களிப்பு வளர்ச்சியில் ஏற்பட்ட குறைவே பிரதான காரணமாகும். 30 சதவீத மீளளிப்புக்களின் மொத்தத் தொகையானது ரூ.15.2 பில்லியனாகவும் மற்றைய மீளளிப்புக்கள் ரூ.111.1 பில்லியனாகவும் காணப்பட்டது. 2015 இலிருந்து 2019 இறுதியில் திரண்ட 30 சதவீத மீளளிப்புக்கள் ரூ.88.3 பில்லியனாகக் காணப்பட்டது. ஓய்வுகால வயதினை அடைந்த உறுப்பினர்களுக்கான மொத்த மீளளிப்புத் தொகை 2018இன் ரூ.74.2 பில்லியனிலிருந்து 2019இல் ரூ.87.5 பில்லியனுக்கு 17.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதேவேளை, திருமணம் காரணமாக பெண் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த மீளளிப்பானது 2018 ஆண்டு காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.7.0 பில்லியனிலிருந்து 2019 ஆண்டு காலப்பகுதியில் ரூ.8.0 பில்லியனுக்கு 14.3 சதவீதமானதொரு அதிகரிப்பைப் பதிவுசெய்தது. அட்டவணை 1இல் காட்டப்பட்டவாறு மீளளிப்புக்களில், ஓய்வுகால வயதினை அடைந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மீளளிப்புக்கள் பெரும்பங்கினைக் கொண்டிருந்ததுடன் அதனைத் தொடர்ந்து 30 சதவீத மீளளிப்புக் காணப்பட்டது.

2.2 ஊ.சே. நிதியத்தின் முதலீட்டுச் சொத்துப்பட்டியல்

நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் அட்டவணை 2 மற்றும் வரைபடம் 13இல் காட்டப்பட்டவாறு 2018இன் ரூ.2,298.8 பில்லியனிலிருந்து 2019இல் ரூ.2,548.7 பில்லியனுக்கு 10.9 சதவீதத்தினால் அதிகரித்தது.

அட்டவணை 1 2019 ஆண்டு காலப்பகுதியில் ஊ.சே.நிதிய மீளளிப்புக் கொடுப்பனவுகளின் உள்ளமைப்பு

ஊ.சே. நிதிய மீளளிப்பிற்கான அடிப்படை	மீளளிப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை (அ)		மீளளிப்பு நன்மைகளின் மொத்தத் தொகை (அ)	
	எண்ணிக்கை	%	ரூ.மில்	%
ஓய்வூதிய வயதினை அடைந்தமை	96,991	56.6	87,518.7	70.6
30 சதவீத எடுப்பனவுகள்	31,466	18.3	15,142.6	12.2
திருமணம் காரணமாக	23,207	13.5	8,047.7	6.5
உறுப்பினர்களின் மரணம்	5,955	3.5	3,911.6	3.2
ஏனையவை	13,860	8.1	9,357.2	7.5
மொத்தம்	171,479	100	123,977.8	100

அ) இது முதலாவது கொடுப்பனவினையும் 30 சதவீத மீளளிப்புக்களையும் மாத்திரம் உள்ளடக்குகிறது.

மூலங்கள்: தொழில் திணைக்களம்

முதலீட்டுச் சொத்துப்பட்டியலில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு தேறிய வருமானமான ரூ.222.8 பில்லியனும் தேறிய உறுப்பினர் பங்களிப்பான ரூ.30.9 பில்லியனும் முக்கியமாகப் பங்களித்தன. ஊ.சே. நிதியத்தின் முதலீட்டுச் சொத்துப்பட்டியலானது, அரச பிணையங்கள், பங்குரிமை, கம்பனித் தொகுதிக் கடன் பத்திரங்கள் மற்றும் நிலையான வைப்புக்கள் உட்பட ஏனைய குறுங்கால முதலீடுகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. அரச பிணையங்களில் முதலீடுகளின் குவிவு 2018இன் 92.2 சதவீதத்திலிருந்து 2019 இறுதியில் 93.8 சதவீதத்திற்கு அதிகரிப்பொன்றினைக் காட்டியவிடத்து பங்குரிமையில் முதலீடுகளின் உள்ளமைப்பு 2018இன் 3.3 சதவீதத்திலிருந்து 2019இல் 3.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2019இல் கம்பனிப் படுகடன் பிணையங்கள் மற்றும் குறுங்கால நிலையான வைப்புக்களின் முதலீடுகள் சொத்துப்பட்டியலில் முறையே 1.6 சதவீதத்திற்கும் 1.0 சதவீதத்திற்கும் வகைகூறின. 31.12.2019இல் தவணை மற்றும் ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் துணைநில் வைப்பு வசதி என்பனவற்றிலுள்ள முதலீடுகளை உள்ளடக்கிய நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைக் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த நிலுவையானது மொத்தச் சொத்துப்பட்டியலில் 0.6 சதவீதத்திற்கு வகைகூறின.

2.2.1 அரச பிணையங்களின் சொத்துப்பட்டியல்


திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களை உள்ளடக்கிய அரச பிணையங்கள் சொத்துப்பட்டியல் 2018இன் இறுதியின் ரூ.2,119.2 பில்லியனிலிருந்து 2019இன்

அட்டவணை 2 முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 2015 - 2019

சொத்து வகுப்பு	தொகை ரூ. பில்லியனில்				
	2015	2016	2017	2018	2019
அரச பிணையங்கள்	1,487.0	1,650.4	1,818.6	2,119.2	2,390.4
பங்குரிமை முதலீடு	87.6	80.9	84.3	74.9	75.4
கம்பனித் தொகுதிக் கடன் பத்திரங்கள்	22.6	34.3	38.7	43.7	41.9
நிலையான வைப்புக்கள்	0.0	0.0	48.0	33.6	25.0
நம்பிக்கைப் பொறுப்புச் சான்றிதழ்கள், நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் ஏனைய முதலீடுகள்	7.0	6.6	2.7	27.4	16.0
முழுமொத்தம்	1,604.2	1,772.2	1,992.4	2,298.8	2,548.7

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 13 முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 2015 - 2019




மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

இறுதியில் ரூ.2,390.4 பில்லியனுக்கு 12.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. 2019ஆம் ஆண்டுப்பகுதியில், ஊ.சே.நிதியம் அரச பிணையங்கள் சொத்துப்பட்டிலின் மீது ரூ.246.4 பில்லியன் கொண்ட வட்டி வருமானத்தினை ஈட்டிக் கொண்டதன் மூலம் நிதியத்தின் மொத்த வருமானத்தில் 96.7 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தியது. 2019இல் அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் நிறையேற்றப்பட்ட சராசரி நடைமுறை விளைவு 9.82 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது. அட்டவணை 3இல் தரப்பட்டுள்ள முதிர்ச்சித் தோற்றப்பாட்டின்படி மொத்த அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலில் 75 சதவீதத்திற்கும் கூடுதலானவை 5 ஆண்டுகளுக்கும் கூடுதலான முதிர்ச்சியை உள்ளடக்கி ஊழியர் சேமலாப நிதியம் நீண்ட கால முதிர்ச்சிகளில் முதலீடு செய்ய ஆர்வம் கொண்டிருப்பதனை எடுத்துக்காட்டியது.

2.2.2 பங்குரிமை சொத்துப்பட்டியல்

பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத பங்குரிமைகள் இரண்டையும் உள்ளடக்கிய ஊ.சே. நிதியத்தின் பங்குரிமைச் சொத்துப்பட்டியலின் சந்தைப் பெறுமதி 2018இன் இறுதியின் ரூ.74.9 பில்லியனிலிருந்து 2019இன் இறுதியில் ரூ.75.4 பில்லியனுக்கு 0.7 சதவீதத்தினால் அதிகரித்தது. சந்தைப்படியான பெறுமதிகளில் மதிப்பிடப்பட்ட பட்டியலிடப்பட்ட பங்குரிமைச் சொத்துப்பட்டியல் 2018இன் இறுதியின் ரூ.64.9 பில்லியனிலிருந்து 2019இன் இறுதியில் ரூ.66.3 பில்லியனுக்கு 2.2 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் செலவினை அடிப்படையாகக் கொண்டு பதிவுசெய்யப்பட்ட பட்டியலிடப்படாத சொத்துப்பட்டியல் முன்னைய ஆண்டின் ரூ.9.9 பில்லியனிலிருந்து 2019இன் இறுதியில் ரூ.9.1 பில்லியனுக்கு 7.8 சதவீதத்தினால் குறைவடைந்தது. பட்டியலிடப்படாத பங்குரிமைச் சொத்துப்பட்டியல் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு லாப்ஸ் பவர் லிமிடெட்டின் வாக்குரிமையுள்ள மற்றும் வாக்குரிமையற்ற பங்குகளைப் பட்டியலிட்டமை மற்றும் வெலிகம ஹோட்டல் புறப்பட்டீஸ் (பிறைவேற்) லிமிடெட்டின் பங்குரிமை முதலீட்டின் விற்பனையும் காரணமாகும். பட்டியலிடப்பட்ட பங்குரிமை சொத்துப்பட்டியலின் ஊ.சே. நிதியத்தின் முதலீடுகள் பல்வேறு துறைகளான வங்கிகள், நிதி, காப்புறுதி, பன்முகப்படுத்தப்பட்ட உடைமைகள், சுற்றுலா விடுதிகள் மற்றும் பயணங்கள், தொலைத்தொடர்பூட்டல் மற்றும் தயாரிப்புக்கள் போன்ற துறைகளிலுள்ள கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட பாரிய

வரைபடம் 14 பட்டியலிடப்பட்ட பங்குரிமைச் சொத்துப்பட்டியலின் துறைவாரியான உள்ளமைப்பு - 2019 இறுதியிலுள்ளவாறு



மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 3 அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு - 2019 இறுதியிலுள்ளவாறு

முதிர்ச்சிக்காலம்	முதிர்ச்சிப் பெறுமதி (ரூ. மில்லியன்)	பங்கு (%)	சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு (%)
1 ஆண்டிற்கும் குறைவானது	117,804.5	4.9	7.96
1 - 2 ஆண்டுகள்	174,652.7	7.3	8.74
3 - 4 ஆண்டுகள்	293,388.2	12.3	9.52
5 ஆண்டுகளுக்குக் கூடுதலானது	1,804,331.7	75.5	10.09
மொத்தம்	2,390,177.1	100.0	9.82

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

கம்பனிகளை உள்ளடக்கியிருந்தன (வரைபடம் 14). ஊ.சே. நிதியம் அதன் பட்டியலிடப்பட்ட பங்குரிமை சொத்துப்பட்டியலில் 52 சதவீதத்தினை வங்கிகள், நிதி மற்றும் காப்புறுதித் துறையில் வைத்திருந்தது. ஊ.சே. நிதியத்தின் பங்குரிமை சொத்துப்பட்டியல் 2019இல் ரூ.4.4 பில்லியன் கொண்டதொரு தேறிய இலாபத்தைப் பதிவுசெய்தது.

2.2.3 கம்பனிப் படுகடன் சொத்துப்பட்டியல்

ஊ.சே.நிதியமானது கம்பனித் தொகுதிக்கடன்கள், நம்பிக்கைப் பொறுப்புச் சான்றிதழ்கள் மற்றும் உயர் கொடுகடன் தரமிடல்களைக் கொண்ட கம்பனிகளினால் வழங்கப்பட்ட ஈடுகளினால் உத்தரவாதமளிக்கப்பட்ட பிணையங்கள் போன்ற படுகடன் சாதனங்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கமைய, 2019இல் கொடுகடன் தரமிடல் முதலீட்டுத் தரத்தினைக் கொண்ட வங்கித்தொழில் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட மூன்று கம்பனிப் படுகடன் சாதனங்களில் ரூ.3,255.5 மில்லியனை ஊ.சே. நிதியம் முதலீடு செய்திருக்கிறது. 2019 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு நிதியத்தின் கம்பனி தொகுதிக்கடன் சொத்துப்பட்டியலானது ஏட்டுப்பெறுமதியில் ரூ.41.9 பில்லியனைப் பதிவுசெய்து மொத்தச் சொத்துப்பட்டியலில் 1.6 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தது. நிதியமானது கம்பனிப் படுகடன் சொத்துப்பட்டியலின் மீது ரூ.5,043.4 மில்லியன் கொண்ட வட்டி வருமானத்தை உழைத்ததுடன் இவ்வாண்டுப்பகுதியில் சராசரி சொத்துப்பட்டியல் மீதான வருவாய் வீதம் 11.59 சதவீதமாகக் காணப்பட்டது.

2.2.4 நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்

நிதியத்தின் திரவத்தன்மையை முகாமைத்துவம் செய்வதற்காக இலங்கை மத்திய வங்கியின் மீள்கொள்வனவுச் சந்தையிலும் திறந்த சந்தைத் தொழிற்பாட்டு நிலையத்திலும் நாளாந்த மிகை நிதியங்கள் முதலீடு செய்யப்படுகின்றன. 2019ஆம் ஆண்டுப்பகுதியில் நிதியம், 2018இல் உழைக்கப்பட்ட ரூ.685.3 மில்லியனுடன் ஒப்பிடுகையில் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து ரூ.1,171.5 மில்லியன் கொண்டதொரு வட்டி வருமானத்தினை ஈட்டிக் கொண்டது.

2.2.5 நிலையான வைப்புக்கள்

நாணயச் சபையினால் வழங்கப்பட்ட விசேட ஒப்புதலின் அடிப்படையில், ஊ.சே. நிதியம் அதன் நிதியத்தினை மூன்று அரச வங்கிகளிலும் உயர்ந்தபட்சம் ஒரு ஆண்டு முதிர்ச்சிக் காலப்பகுதிகளுக்கு குறுங்கால நிலையான வைப்புக்களில் முதலீடு செய்தது. இதற்கமைய, 2019இன் இறுதியிலுள்ளவாறான நிலையான வைப்பு முதலீடுகளின் வெளிநின்ற நிலுவையானது ரூ.25.0 பில்லியனாக விளங்கியதுடன் இது மொத்தச் சொத்துப்பட்டியலில் 1.0 சதவீதத்திற்குச் சமமானதாகக் காணப்பட்டது. 2019இல் இம்முதலீடுகளூடாக உழைக்கப்பட்ட வட்டி வருமானம் ரூ.2,104 மில்லியனாகக் காணப்பட்டது.

2.2.6 நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானம்

2019இல் நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானம் ரூ.259.0 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16.5 சதவீதமான ஒரு அதிகரிப்பைப் பதிவுசெய்தது (அட்டவணை 4). வட்டி வருமானம் நிதியத்தின் முக்கிய வருமான மூலமாக (வருமானத்தின் 98.3 சதவீதம்) விளங்கியதுடன் இது 2018இன் ரூ.229.4 பில்லியனிலிருந்து 2019இல் ரூ.254.7 பில்லியனுக்கு 11.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மேலும், மூலதன இலாபம் மற்றும் பங்கிலாபம் ஆகிய இரண்டினையும்

அட்டவணை 4 நிதியத்தின் முதலீட்டு வருமானம்

வருமான மூலங்கள்	2018	2019	வளர்ச்சி (%)
	தொகை (ரூ. மில்லியன்)	தொகை (ரூ. மில்லியன்)	
வட்டி	229,446.0	254,681.0	11.0
பங்கிலாபங்கள்	3,887.6	6,247.5	60.7
தேறல் செய்யப்பட்ட மூலதன இலாபம்/ (நட்டம்)	7.2	0.1	(98.0)
இலாபம் அல்லது நட்டமூடாகச் சீர்மதிப்புப் பெறுமதியிலான நிதியியல் சாதனங்களிலிருந்தான தேறிய இலாபம்/ (நட்டம்)	(10,901.3)	(1,890.0)	82.7
நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழப்பு	0.6	0.3	(46.0)
மொத்தம்	222,440.1	259,038.9	16.5

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

உள்ளடக்கிய பங்குரிமைச் சொத்துப்பட்டியலிலிருந்து உருவாக்கப்பட்ட வருமானம் 2018இன் ரூ.3,894.8 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2019இல் ரூ.6,247.6 மில்லியனைப் பதிவுசெய்தது.

2.3 ஊ.சே. நிதியத்தின் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான ஆளுகைக் கட்டமைப்பு

நிதியத்தின் பாதுகாவலராக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை ஊ.சே.நிதியத்தின் இடர்நேர்வு முகாமைத்துவத்தை மேற்பார்வையிடுகிறது. அதன்படி, ஊ.சே.நிதியத்தின் இடர்நேர்வு முகாமைத்துவ நடவடிக்கைகள் இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகக் கருதப்படுகின்றன, இது ஊ.சே.நிதிய செயற்பாடுகள் உட்பட அதன் அனைத்து நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத இடர்நேர்வு நடவடிக்கைகளையும் மையப்படுத்தியுள்ளது. மேலும், ஊ.சே.நிதியத்தின் நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளின் இறுதி முடிவெடுக்கும் அதிகாரத்தைக் கொண்ட நாணயச் சபையானது ஊ.சே. நிதியத்தின் முதலீட்டு நடவடிக்கைகளுக்கான கொள்கை வழிநடத்துதலை வழங்குதல் மற்றும் நிதியம் நிர்வகிக்கப்பட வேண்டிய இடர்நேர்வின் அளவு மற்றும் இடர்நேர்வு சகிப்புத்தன்மை மட்டங்கள் போன்ற ஒட்டுமொத்த இடர்நேர்வு அளவுருக்களை வரையறுக்கின்றது. ஊ.சே. நிதியத்தின் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் ஆளுகையை வலுப்படுத்துவதற்காக சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு மற்றும் ஊ.சே.நிதிய முதலீட்டு மேற்பார்வைக் குழு ஆகிய இரண்டு உயர் மட்டக் குழுக்கள் மூலம் அந்தந்த நடவடிக்கைகளை நாணயச் சபை நிர்வகித்து வருகிறது.

இடர்நேர்வு முகாமைத்துவ செயற்பாட்டை மேற்பார்வையிடுவதற்கு சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு பொறுப்பாகும் மற்றும் நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பான மிக உயர்ந்த மேற்பார்வை அதிகாரத்தை ஊ.சே.நிதிய முதலீட்டு மேற்பார்வைக் குழு வழங்குகிறது. ஊ.சே.நிதிய முதலீட்டு மேற்பார்வைக் குழுவின் பங்கு, நிதியத்தை முகாமை செய்வதற்கான தந்திரோபாய மற்றும் கொள்கை வழிகாட்டுதல்களை வழங்குவதன் மூலம் ஊ.சே.நிதியத்தின் முதலீட்டு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்கின்றது. மேலும், ஊ.சே. நிதியம் நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளின் நாளாந்த முதலீட்டு தீர்மானம் எடுக்கும் தொழிற்பாடு தொடர்பான அதிகாரங்கள் திணைக்கள மட்டக் குழுவான ஊ.சே.நிதிய முதலீட்டுக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஊ.சே.நிதியத்தின் நிதிய முகாமைத்துவப் பிரிவின் மத்திய அலுவலகம் முதனிலைப் பாதுகாப்பாளராக நாளாந்தச் செயற்பாட்டு இடர்நேர்வு அம்சங்களை தொடர்ச்சியான அடிப்படையில் மேற்பார்வையிடுகிறது. இதன்படி, முதலீட்டு கொள்கைக் கூற்று, உபாய சொத்து ஒதுக்கீடு மற்றும் முதலீட்டு வழிகாட்டல்கள் ஆகியவற்றில் வழங்கப்பட்ட அளவுருக்களுக்கேற்ப முதலீட்டு நடவடிக்கைகளின் முந்திய மற்றும் பிந்திய இணக்கப்பாடுகள் கண்காணிக்கப்படுகின்றன. இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களமானது இரண்டாம் நிலைப் பாதுகாப்பாளராகச் செயற்படுகின்றது. அத்துடன் ஊ.சே.நிதியத்தின் நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளை ஒரு சுயாதீனமான முறையில் மதிப்பிடுதல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் மூலம் முதலீட்டு ஆளுகைச் செயன்முறைக்கான கொள்கை கட்டமைப்பை வழங்குவதற்கான பொறுப்பைக் கொண்டுள்ளது. அதன்படி, உள்ளகக் கட்டுப்பாடுகளின் போதுமான அளவை பராமரிக்கும் அதேவேளை புதுப்பிக்கப்பட்ட சந்தை தேவைகளிற்கிணங்க முதலீட்டு கொள்கைக் கூற்று, உபாய சொத்து ஒதுக்கீடு மற்றும் முதலீட்டு வழிகாட்டல்கள் ஆகியவற்றை மீளாய்வு செய்தல் மற்றும் புதுப்பித்தல், தற்போதுள்ள பணி நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் முதலீட்டுத் தீர்மானங்களை எடுக்கும் செயற்பாட்டில் அதிக சுதந்திரம் வழங்குவதன் மூலம் முதலீட்டு நடவடிக்கைகள் தொடர்பான பொருத்தமான கொள்கை வழிமுறைகள் மற்றும் வழிகாட்டல்களை இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் கையாளுகின்றது. மூன்றாம் நிலைப் பாதுகாப்பாளராக, உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் ஊ.சே.நிதியத்தின் நிதிய முகாமைத்துவ செயற்பாடு தொடர்பாக இடர்நேர்வு உத்தரவாதத்தை வழங்குகிறது.

மேலும், ஒட்டுமொத்த ஊ.சே.நிதியத் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பான நிதியியல் அல்லாத இடர்நேர்வுகளை முன்னிலைப்படுத்துவதற்கும் நிவர்த்தி செய்வதற்குமான ஒரு தனித்துவமான பொறிமுறையானது நிதியியல் அல்லாத இடர்நேர்வு முகாமைத்துவக் குழு என்னும் ஒரு தனி குழு மூலம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, நிதியியல் அல்லாத இடர்நேர்வுகளை அடையாளம் காணவும் மீளாய்வு செய்யவும் மற்றும் இடர்நேர்வுக் குறைப்பு நடவடிக்கைகளை தீர்மானிக்கவும் கண்காணிக்கவும் அவ்வப்போது இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவ திணைக்களம் மூலம் மதிப்பாய்வுகள் நடாத்தப்படுகின்றன.

2.4 தொழிற்பாட்டுச் செலவினம்

நிதியத்தின் மொத்தத் தொழிற்பாட்டுச் செலவினம் 2019இல் ரூ.1,581.8 மில்லியனுக்கு அதிகரித்து 2018இன் ரூ.1,505.3 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 5.1 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியமைக்கு ஆளணிச் செலவினங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். இருந்தபோதும், மொத்த வருமானத்தின்

அட்டவணை 5 நிதியத்தின் தொழிற்பாட்டுச் செலவினம்

விடயம்	இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே.நிதியத் திணைக்களம்			தொழில் திணைக்களம்			மொத்தம்		
	2018 (ரூ. மில்லியன்)	2019 (ரூ. மில்லியன்)	மாற்றம் (%)	2018 (ரூ. மில்லியன்)	2019 (ரூ. மில்லியன்)	மாற்றம் (%)	2018 (ரூ. மில்லியன்)	2019 (ரூ. மில்லியன்)	மாற்றம் (%)
ஆளணிச் செலவினங்கள்	559	632	13.1	408	431	5.6	967	1,063	9.9
நிர்வாகச் செலவினங்கள்	284	235	(17.3)	186	215	15.6	470	450	(4.3)
ஏனைய செலவினங்கள்	59	60	1.7	9	9	-	68	69	1.5
மொத்தம்	**902**	**927**	**2.8**	**603**	**655**	**8.6**	**1,505**	**1,582**	**5.1**
மொத்த வருமானத்தின் சதவீதமாக மொத்தச் செலவினங்கள்	**0.41**	**0.36**		**0.27**	**0.25**		**0.68**	**0.61**	

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

ஒரு சதவீதமாக தொழிற்பாட்டுச் செலவினங்கள், 2018இன் 0.68 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 0.61 சதவீதத்திற்கு குறைவடைந்தது (அட்டவணை 5).


2.5 வரிச் செலவினம்

2018.04.01 இலிருந்து நடைமுறைக்கு வந்த 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க புதிய உள்நாட்டு இறை வரிச் சட்டத்தின் அறிமுகத்துடன், நிதியத்திற்குப் பிரயோகிக்கத்தக்க வருமான வரி வீதம் 10 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வரிச் செலவினத்தில் ரூ.4.2 பில்லியன் கொண்டதொரு அதிகரிப்பினைத் தோற்றுவித்தது. மேலும், முன்னைய வரி ஒழுங்குவிதிகளின் கீழ் மொத்த வருமானத்தின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்பட்டிருந்த திறைசேரி முறி மீதான வட்டி வருமானத்தின் 10.0 சதவீதம் கொண்ட பிடித்துவைத்தல் வரி 2018.04.01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் விலக்கப்பட்டது.

2.6 உறுப்பினர் கணக்கு நிலுவைகள் மற்றும் வரவு வைக்கப்பட்ட வட்டி

2019இல், உறுப்பினர் கணக்குகளுக்கு அவர்களின் இறுதி நிலுவைகளின் மீது வட்டியாக ரூ.210.4 பில்லியன் கொண்டதொரு தொகை வரவு வைக்கப்பட்டது. இதற்கமைய, உறுப்பினர் நிலுவைகளின் பெறுமதி 2018 இறுதியின் ரூ.2,254.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019 இறுதியில் ரூ.2,497.6 பில்லியனுக்கு 10.8 சதவீதத்தினால்

வரைபடம் 15 உறுப்பினர் நிலுவைகளும் வரவிடப்பட்ட வட்டியும்



மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

அதிகரித்தது. அண்மைய ஆண்டுகளில் தளம்பலான வட்டி வீதச் சூழலொன்று நிலவியமைக்கிடையிலும் நிதியமானது, 2019 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான உறுப்பினர் கணக்குகளின் இறுதி நிலுவைகள் மீது 9.25 சதவீதமானதொரு வட்டி வீதத்தினைப் பிரகடனப்படுத்தக் கூடியதாகவிருந்தது. இது 2018 உடன் ஒப்பிடும் போது 0.25 சதவீதமானதொரு சிறிய குறைவாகும்.

2.7 வீடமைப்புக் கடன் உத்தரவாத வசதி

வீடமைப்புக் கடன் திட்டமானது, பங்கேற்கின்ற கடன்வழங்கல் நிறுவனங்களான வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டுத்தாபன வங்கி, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் என்பனவற்றிலிருந்து உறுப்பினர்கள் வீடமைப்புக் கடன்களை

அட்டவணை 6 வீடமைப்புக் கடன் வசதி

ஆண்டு	வழங்கப்பட்ட சான்றிதழ்கள் (எண்ணிக்கை)	ஒப்புதலளிக்கப்பட்ட கடன் (ரூ. மில்லியன்)	முன்னைய ஆண்டின் கடன்நிலுவைகளைத் தீர்ப்பதற்கு கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட தொகை (ரூ.மில்லியன்)
2009	10,383	2,680	1,552
2010	13,848	4,512	2,093
2011	20,041	6,355	1,896
2012	11,234	3,973	2,019
2013	16,268	6,914	2,178
2014	17,786	8,021	2,394
2015	13,132	5,489	2,522
2016	12,780	5,414	2,541
2017	10,998	4,946	2,485
2018	10,036	4.974	2,759
2019*	10,022	5,097	3,164

* தற்காலிகமானவை

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

பெற்றுக்கொள்வதனை வசதிப்படுத்தும் நோக்குடன் 1988இல் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இது 2019 இலும் தொடர்ந்தது. இத்திட்டத்தின் கீழ், 2019 ஆண்டு காலப்பகுதியில், ஊ.சே. நிதியம் ரூ.5,097 மில்லியன் கொண்ட வீடமைப்புக் கடன்களின் ஒப்புதலுக்காகப் பங்கேற்கும் கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு உறுப்பினர்களின் ஊ.சே.நிதிய நிலுவைகளுக்கெதிராக 10,022 உத்தரவாதச் சான்றிதழ்களை அவர்களுக்கு வழங்கியது (அட்டவணை 6). மேலும், 2018ஆம் ஆண்டுப்பகுதியில் நிலுவையிலிருந்த கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு தொடர்பான உறுப்பினர் கணக்குகளிலிருந்து ஏறத்தாழ ரூ.3,164 மில்லியன் கழிக்கப்பட்டு பங்கேற்கும் கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு 2019இல் அனுப்பி வைக்கப்பட்டது.

2.8 சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

ஊ.சே.நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, தொழில் திணைக்களம் நிதியத்தின் பொது நிர்வாகத்திற்கும் ஊ.சே.நிதியச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாக இருக்கின்றது. இதன்படி, 2019ஆம் ஆண்டுப்பகுதியில், அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்குகின்ற விதத்தில் மாவட்ட தொழில் அலுவலகங்களும் துணை அலுவலகங்களும் 8,973 புதிய தொழில்தருநர்களையும் 37,297 புதிய ஊழியர்களையும் பதிவுசெய்தன. 2019ஆம் ஆண்டுப்பகுதியில், பதிவுசெய்யப்பட்ட தொழில்தருநர்களில் 40 சதவீதத்திற்கு மேற்பட்டோர் மேல் மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்ட வேளையில் வட, மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒன்றுசேர்ந்து மொத்தத் தொழிலாளர் பதிவுகளில் 11.3 சதவீத்திற்கு வகைகூறின.

சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, உறுப்பினர் பங்களிப்புக்களைச் செலுத்தாத தொழில்தருநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான அதிகாரம் தொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, மாவட்ட தொழில் அலுவலகங்களும் துணைத்தொழில் அலுவலகங்களும் நிலுவையிலுள்ள ஊ.சே.நிதிய பங்களிப்புக்களான ரூ.6,839 மில்லியன் மற்றும் ரூ.5,231 மில்லியனையும் கோரி முறையே 19,616 முதல் அறிவித்தல்களையும் 13,735 சிவப்பு அறிவித்தல்களையும் அனுப்பியிருக்கின்றன. மேலும், சிவப்பு அறிவித்தல்கள் கிடைத்ததன் பின்னர் 28 நாட்களுக்குள் நிலுவைகளைச் செலுத்தத்தவறிய 4,235 நிறுவனங்களுக்கெதிராக சட்ட

அட்டவணை 7 சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

விபரம்		ஆண்டு					
		2014	2015	2016	2017	2018	2019
புதிய பதிவுகள்	தொழில்தருநர்கள்	7,213	6,736	7,134	7,710	9,243	8,973
	ஊழியர்கள்	296,056	48,007	34,264	280,079	37,662	37,297
மாகாண ரீதியாக தொழில்தருநர் பதிவுகள் (மொத்த தொழில்தருநர் பதிவுகளின் சதவீதமாக)	மேல்	65.0	50.0	50.0	50.4	43.0	42.8
	வடக்கு மற்றும் கிழக்கு	3.0	7.0	6.5	6.3	15.0	11.3
	ஏனையவை	32.0	43.0	43.5	43.3	42.0	45.9
முதலாவது அறிவித்தல்கள்	அனுப்பப்பட்ட அறிவித்தல்களின் எண்.	12,132	9,015	10,074	10,888	13,653	19,616
	கோரப்பட்ட தொகை (ரூ.மில்லியன்)	6,280	4,018	4,464	5,876	4,316	6,839
சிவப்பு அறிவித்தல்கள்	அனுப்பப்பட்ட அறிவித்தல்களின் எண்.	13,578	5,670	6,508	6,613	8,364	13,735
	கோரப்பட்ட தொகை (ரூ.மில்லியன்)	1,121	2,864	3,454	3,775	3,320	5,231
கோப்பிடப்பட்ட வழக்குகள்	வழக்குகளின் எண்ணிக்கை	3,397	6,458	2,622	3,019	2,831	4,235
	அறவிடப்பட்ட தொகை (ரூ.மில்லியன்)	6,126	1,308	855	1,093	1,710	547

மூலம்: தொழில் திணைக்களம்

ரீதியான வழக்குகளை தொடுத்ததன் மூலம் தொழில் திணைக்களம் ரூ.547 மில்லியனை அறவிட்டுக் கொண்டது.

2.9 ஊ.சே.நிதிய உறுப்பினர்களை மீளப்பதிவு செய்தல்

ஊ.சே.நிதிய உறுப்பினர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் வினைத்திறன் மிக்க பணியினை வழங்கும் நோக்குடன் ஊ.சே.நிதியத் திணைக்களம் தொழில் திணைக்களத்துடன் இணைந்து அதனுடைய உறுப்பினர்களை மீளப் பதிவுசெய்வதற்காக 2010இல் ஆரம்பிக்கப்பட்ட சிறப்புச் செயற்றிட்டமானது தொடரப்பட்டது. இதனடிப்படையில், தேசிய அடையாள அட்டை தரவுகளின்படி உறுப்பினர் தகவல்களைச் சேகரிப்பதற்கும் தேசிய அடையாள அட்டை விபரங்களுக்கிணங்க அத்தகைய உறுப்பினர்களை மீள்பதிவு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. உறுப்பினர்களை மீள்பதிவு செய்வதன் மூலம் ஊ.சே.நிதியத் திணைக்களத்திற்கும் தொழில் திணைக்களத்திற்கும் ஒரு பொதுவான உறுப்பினர் மையப்படுத்தப்பட்ட தரவுத் தளத்தினை உருவாக்கி ஒரு தனித்துவமான அடையாள இலக்கத்தினூடாக உறுப்பினர்களை இனங்காண வசதிப்படுத்துகின்றது. இறுதியாக, இந்தச் செயற்பாடானது, ஊ.சே.நிதிய திணைக்களம் மற்றும் தொழில் திணைக்களம் இரண்டிற்கும் உறுப்பினர் தகவல்களின் தரத்தினை மேம்படுத்துவதனூடாக அவர்களுடைய ஆர்வலர்களுக்கு வினைத்திறனான பணியை வழங்குவதற்கு உதவுகின்றது.

ஏறத்தாழ 1.98 மில்லியன் செயற்படுகின்ற ஊ.சே. நிதிய உறுப்பினர்களின் (பங்களிப்புச் செலுத்துகின்ற உறுப்பினர்கள்) தேசிய அடையாள அட்டை விபரங்கள் சேகரிக்கப்பட்டன. இதன்படி, செயற்படுகின்ற உறுப்பினர் கணக்குகளில் 81 சதவீதத்திற்கு 1.62 மில்லியன் தனித்துவமான அடையாள இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ள வேளையில் எஞ்சிய உறுப்பினர்களின் விபரங்களை சரிபார்க்கும் செயன்முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒரு மாதாந்த அடிப்படையில் முதன்முறையாக உறுப்பினர் பங்களிப்புக்களைச் செலுத்திய அனைத்தைப் புதிய உறுப்பினர்களின் தேசிய அடையாள அட்டை தகவல்களின் பிழைகளற்ற புதுப்பித்தலைக் கண்காணிப்பதற்கு ஒரு முறைமையானது நிறுவப்பட்டுள்ளது. மேலும், ஆட்பதிவுத் திணைக்களத்தின் தரவுத் தளத்திற்கான அனுமதியைப் பெறுவதன் மூலம் மீள்பதிவுச் செயன்முறையை வலுப்படுத்துவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்துடன் புரிந்துணர்வு

ஒப்பந்தமொன்றை கையெழுத்திடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றது.

2.10 ஊ.சே.நிதியக் கொடுப்பனவுகளுக்கான இ-திரட்டு முறைமை

ஊ.சே. நிதியப் பங்களிப்புக்களையும் தொடர்பான உறுப்பினர்களின் விபரங்களையும் இலத்திரனியல் முறைமையில் சேகரிப்பதை வசதியளிக்கின்ற இ-திரட்டு முறைமையானது காகிதங்களற்ற தொழிற்பாட்டுச் சூழலொன்றில் அதன் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் ஊ.சே. நிதியத் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறைமையானது தொடர்பான 2012இன் ஊ.சே. நிதிய 2ஆம் இலக்க (திருத்தச்) சட்டம் இயற்றப்படும் வரை சுயவிருப்பு அடிப்படையில் தொழிற்பட்டது. இதற்கிணங்க, 50 இற்கும் மேற்பட்ட ஊழியர்களை அவர்களது நிறுவனங்களில் கொண்டுள்ள தொழில்தருநர்களுக்கு அவர்களது ஊ.சே. நிதியப் பங்களிப்பு விபரங்களை இலத்திரனியல் முறைமைக்கூடாக சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டது. 2011இல், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் சொந்த அதேநேர நுழைவு வழிகளினூடாக ஊ.சே. நிதிய பங்களிப்புக்களைச் சேகரிப்பதற்கு வசதியளிப்பவர்களாக இம்முறைமையில் இணைந்து கொண்டமையின் மூலம் நிர்வாக மற்றும் கண்காணிப்புத் தொழிற்பாடுகளை வலுப்படுத்திய அதேவேளை, உறுப்பினர் கணக்குகளை இற்றைப்படுத்தும் செயன்முறை விரைவுபடுத்தப்பட்டதுடன் தொழில்தருநர்களின் பங்கேற்பில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இடம்பெற்றது. 100 சதவீத செய்முறை தன்னியக்கப்படுத்தலையும் உறுப்பினர் கணக்குகளைக் கணனிவழியில் அதேநேரத்தில் இற்றைப்படுத்துவதற்குமாக அதேநேர உறுப்பினரின் தகவல்களைச் சரிபார்க்கும் பொறிமுறையின் அறிமுகப்படுத்தலுடன் இ-திரட்டு முறைமை அதன் மிக உயர்ந்த தொழில்நுட்பவியல் முன்னேற்றங்களை 2016இல் எய்தியது. இதற்கிணங்க, எட்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் ஊ.சே. நிதிய அதேநேரக் கொடுப்பனவுகளுக்கு வசதியளிப்பதில் ஈடுபட்டிருந்ததுடன் இதில் நான்கு வங்கிகள் அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு அதேநேரக் கணனிவழி உறுப்பினர் தகவல்களை உறுதிப்படுத்தக் கூடியனவாக இருந்ததுடன் அதேநேர உறுப்பினர் கணக்குகளை இற்றைப்படுத்தும் வசதிகளையும் வழங்கின.

இதற்கு மேலாக, ஊ.சே.நிதியத்தின் ஆர்வலர்களுக்கு இ-திரட்டு சமர்ப்பித்தல் செயன்முறை மற்றும் அதனுடைய நன்மைகள் சம்பந்தமாக மேலதிக விழிப்புணர்வை தொழில்தருநர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கிணங்க, இ-திரட்டு சமர்ப்பித்தல் செயன்முறையில் தொழில்தருநர்களின் பங்கேற்பு 8,540 இலிருந்து 9,267 இற்கு அதிகரித்து, செயற்படுகின்ற உறுப்பினர் கணக்குகளில் ஏறத்தாழ 79 சதவீதத்தினையும் 2019 இறுதியிலுள்ளவாறு மொத்த மாதாந்த ஊ.சே.நிதியப் பங்களிப்பில் ஏறத்தாழ 88 சதவீதத்தினையும் உள்ளடக்கியிருந்தது.

மேலும், ஊ.சே.நிதியக் கொடுப்பனவுகளுக்காக புதிய பொறிமுறைகளை அறிமுகப்படுத்தும் நோக்குடன் தொழில்தருநர்கள் அவர்களது வெப்தளத்தினூடாக இ-திரட்டுக்களைச் சமர்ப்பிப்பதற்கும் லங்காகிளியரினுடைய பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் முறைமையினூடாக ஏதேனும் பங்கேற்கும் வங்கியிலிருந்து மாதாந்தப் பங்களிப்புக்களைச் செலுத்துவதற்கு தொழில்தருநர்களுக்கு வசதியளிப்பதற்கும் என ஊ.சே. நிதிய உத்தியோகபூர்வ வெப்தளத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

2.11 ஓய்வுக்கு முன்னரான மீளளிப்புத் திட்டம்

2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஊ.சே.நிதிய (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளுக்கும் அதன் பின்னர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நடைமுறைகளுக்கிணங்கவும் 30 சதவீதமான ஊ.சே.நிதிய ஓய்விற்கு முன்னரான மீளளிப்புத் திட்டத்தின் கீழான கொடுப்பனவுகள் 2015 யூலை 1 இலிருந்து தொழிற்பாட்டிலுள்ளது. இத்திட்டமானது நன்மைபெறுநர்களிடையே உயர்ந்த கேள்வியைப் பெற்றிருப்பதுடன், இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 2019 இறுதி வரை 155,000 இற்கு மேற்பட்ட நன்மைபெறுநர்களுக்கு, ரூ.88.3 பில்லியன் மீளளிப்புச் செய்யப்பட்டது. 2019ஆம் ஆண்டுப்பகுதியில் இத்திட்டத்தின் கீழ் 29,646 நன்மைபெறுநர்களுக்கு ரூ.15.2 பில்லியன் வழங்கப்பட்டது.

2.12 ஊ.சே. நிதிய நடமாடும் பணி நிகழ்ச்சித்திட்டம்

ஊ.சே. நிதியத்தின் நடமாடும் பணிகளானது, 2019இல் உறுப்பினர் பணிகளை அவர்களின் வசதிகளுக்கேற்ப வழங்குவதனை உயர்த்தும் நோக்குடனும் ஊ.சே. நிதியத்தின் தொழிற்பாடுகள் தொடர்பான பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டன.

ஒரு உறுப்பினர் கொழும்பில் அமைந்துள்ள ஊ.சே. நிதியத் திணைக்களத்திற்கு வருகை தந்து பெறப்படுகின்ற பெரும்பாலான அனைத்துப் பணிகளையும் தமது சொந்த இடத்தில் அல்லது வேலைத் தளத்தில் இருந்து கொண்டே நடமாடும் பணிகள் மூலம் பெற்றுக்கொள்ளலாம். இந்தப் பணிகளானது, ஊ.சே.நிதிய நிலுவைக் கூற்றுக்களை வழங்குதல், ஊ.சே.நிதிய உறுப்பினர்களின் விபரங்களைத் திருத்துதல், ஊ.சே.நிதியக் கணக்கு விபரங்களைத் திருத்துதல், இலத்திரனியல் ஊடகம் மற்றும் நேரடி பற்று முறைமை பற்றி தொழில்தருநர்களுக்கு விழிப்புணர்வை

வழங்குதல், உறுப்பினர் தகவல்களை மீள்பதிவு செய்தல், குறுந்தகவல் மற்றும் இணையத்தள உறுப்பினர் பணிகளை ஊக்குவித்தல் மற்றும் அனைத்து ஊ.சே. நிதிய நடைமுறைகள் பற்றி ஆலோசனை வழங்குதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

இவ்வாண்டுப்பகுதியில் திணைக்களம் 16 நடமாடும் பணிகளையும் 2 முக்கிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தியது. இந்நடமாடும் பணிகளில் சில தொழில் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம், பதிவாளர் நாயகத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் மற்றும் தொடர்பான மாவட்ட/ பிரதேச செயலகங்களின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டன.

ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள்/ அமைச்சுக்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஊ.சே. நிதியம் தொடர்பான நடமாடும் பணிகளில் அப்பங்கேற்பாளர்களுக்கு ஊ.சே. நிதியம் தொடர்பான பணிகளையும் விழிப்புணர்வினையும் வழங்குவதற்காக அவர்களுடைய அழைப்பில் ஊ.சே. நிதியத் திணைக்களம் பங்கேற்றது.

ஒவ்வொரு நடமாடும் பணி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் முன்னதாக, நடமாடும் பணிகளின் காத்திரமான தன்மையினை அதிகரிப்பதற்காக, தொடர்பான தொழில்தருநர்கள், முகாமையாளர்கள் மற்றும் தொடர்பான தொழில்தருநர்களுடைய ஏனைய நிருவாக அலுவலக உறுப்பினர்களுக்கு ஒரு சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.

நடமாடும் பணிகளுக்கு மேலதிகமாக உறுப்பினர்கள், தொழில்தருநர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களை இலக்காகக் கொண்டு ஊ.சே.நிதியத்தினால் வழங்கப்படும் பணிகள் பற்றிய மின்னஞ்சல், சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், வீடியோப் படங்கள் மற்றும் காட்சிப்படுத்தலுடன் கூடிய விளக்கவுரைகள் போன்றதொரு கலந்த தொடர்பூட்டல் ஊடகங்களைப் பயன்படுத்தி விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2.13 ஏனைய பணிகள்

ஊ.சே.நிதியத் திணைக்களமானது அதனுடைய உறுப்பினர்களுக்கு பயனுள்ள தரமான பணிகளை வழங்குவதற்காக பாடுபடுகின்றது. இன்றைய துரிதமயமாக்கப்பட்ட சூழலில் உறுப்பினர்கள் சிறந்த பணியினை எதிர்பார்க்கின்றனர். இதற்கமைய, ஊ.சே. நிதியத் திணைக்களத்தின் பொதுமக்கள் தொடர்புகள் மற்றும் விசாரணைப்பீடமானது ஒரு சவால்மிக்கச் சூழலிலும் ஒரு வெற்றிகரமான முறையில் இதனுடைய பணிகளை வழங்கக்கூடியதாக இருந்தது. 2019இல் ஊ.சே.நிதியத் திணைக்களத்திற்கு வருகை தந்துள்ள உறுப்பினர்கள்/ தொழில்தருநர்களின் எண்ணிக்கை 156,898 ஆக பதிவாகியுள்ளதுடன், திணைக்களமானது 77,310 எண்ணிக்கையான தொலைபேசி மூலமான உறுப்பினர் விசாரணைகளுக்கும், 8,713 எண்ணிக்கையான மின்னஞ்சல் மூலமான உறுப்பினர் விசாரணைகளுக்கும் பதிலளித்துள்ளது. ஊ.சே.நிதியத் திணைக்களத்திற்கு 2019ல் 84,550 எண்ணிக்கையான கடிதங்கள் உறுப்பினர்கள், தொழில்தருநர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது.

ஊ.சே.நிதியத் திணைக்களத்திற்கு உறுப்பினர் கணக்குகளில் திருத்தம் தொடர்பாக பாரிய அளவிலான உறுப்பினர் விண்ணப்பபங்கள் கடிதங்கள் மூலமாகவும் உறுப்பினர்களின் வருகை மூலமாகவும் கிடைக்கப்பெற்றுள்ளது. 2019ல் ஊ.சே.நிதியத் திணைக்களமானது ஏறத்தாழ 72,313 ஊ.சே.நிதிய உறுப்பினர் கணக்கு திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. ஊ.சே.நிதிய உறுப்பினர் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் பிரதானமாக இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன உறுப்பினர் கணக்குகளின் பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கத்திலுள்ள பிழைகளின் திருத்தங்கள் மற்றும் உறுப்பினர் கணக்குகளில் வரவிடப்பட்ட பங்களிப்புக்களின் திருத்தங்கள் ஆகும். 2019இல் ஊ.சே.நிதியத் திணைக்களமானது ஏறத்தாழ 67,083 பெயர்/ தேசிய அடையாள அட்டை இலக்கத்திலுள்ள பிழைகளின் திருத்தங்களையும் 5,230 உறுப்பினர் கணக்குகளில் வரவிடப்பட்ட பங்களிப்பு விபரங்களிலுள்ள பிழைகளின் திருத்தங்களையும் மேற்கொண்டுள்ளது. மேலும் பிம்பப்படுத்தும் ஸ்கானிங் செயற்றிட்டத்தினை அமுல்படுத்தியதன் மூலம் ஊ.சே.நிதிய உறுப்பினர் கணக்கு திருத்தங்களைச் செய்வதற்கான வசதிகளை இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களிற்கும் விரிவுபடுத்தப்பட்டது. இதனடிப்படையில், ஊ.சே.நிதியத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற 12,944 உறுப்பினர் கணக்கு திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.

2.14 ஏனைய தொழிற்பாடுகள்

மேலும், ஊ.சே.நிதியத் திணைக்களமானது உலக வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள நிதியியல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் முதலீட்டு உபாயத்தினையும் கட்டமைப்பினையும் பரிசீலித்து மறுசீரமைக்கவுள்ளது. மேலும், ஊ.சே.நிதியத் திணைக்களத்திற்கு விரிவான தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத் திட்டத்தினை செயற்படுத்துவதற்கான நிதி உதவியினை உலக வங்கி வழங்குகின்றது. இதற்காக, இலங்கை அரசாங்கம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலதன சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழிநுட்ப உதவியுடன் ஒரு வணிக தொழிற்பாட்டு ஆய்வு நடாத்தப்பட்டது.



பிரிவு இ

நிதியியல் கூற்றுக்கள்

ஊழியர் சேமலாப நிதியம்
வருமான செலவினக் கூற்று

திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை	குறிப்பு	2019			2018
		நாணயச் சபை	தொழில் திணைக்களம்	மொத்தம்	மொத்தம்
		ரூ.'000	ரூ.'000	ரூ.'000	ரூ.'000
வட்டி வருமானம்	5	254,680,982	-	254,680,982	229,446,025
பங்கிலாப வருமானம்	6	6,247,497	-	6,247,497	3,887,578
நிதியியல் சொத்துக்களின் மீது பெறப்பட்ட மூலதன இலாபம்	7	137	-	137	7,216
இலாபம் அல்லது நட்டமூடாக சீர்மதிப்புப் பெறுமதியிலான நிதியியல் சாதனங்களிலிருந்தான தேறிய இலாபம்/ (நட்டம்)	8	(1,890,010)	-	(1,890,010)	(10,901,286)
நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழப்பு	9	316	-	316	585
முதலீட்டு வருமானம்		**259,038,922**	**-**	**259,038,922**	**222,440,118**
ஏனைய வருமானம்	10	277,363	6,421	283,784	402,979
மொத்த வருமானம்		**259,316,285**	**6,421**	**259,322,706**	**222,843,097**
தொழிற்பாட்டுச் செலவினங்கள்	11	(927,257)	(654,541)	(1,581,798)	(1,505,337)
வருமான வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்/ (நட்டம்)		**258,389,028**	**(648,120)**	**257,740,908**	**221,337,760**
வரிச் செலவு	12	(34,964,552)	-	(34,964,552)	(30,720,357)
ஆண்டுக்கான இலாபம்/ (நட்டம்)		**223,424,476**	**(648,120)**	**222,776,356**	**190,617,403**
முன்கொண்டு வரப்பட்ட பிடித்துவைக்கப்பட்ட இலாபம்				159,475	268,002
ஆரம்ப மீதிச் சீராக்கம் (குறிப்பு 24.5)				-	2,202,948
சீராக்கப்பட்ட ஆரம்ப பிடித்துவைக்கப்பட்ட இலாபம்				**159,475**	**2,470,950**
பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனத்தின் விற்பனை மீதான மூலதன இலாபம்				90,000	-
பகிர்ந்தளிப்புக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள இலாபம்				**223,025,831**	**193,088,353**
இலாபப் பகிர்ந்தளிப்பு					
கழிக்குக: மீளளிப்புக்கள் தொடர்பில் செலுத்தப்பட்ட வட்டி - நடப்பாண்டு				(4,762,437)	(4,296,117)
கூட்டுக/ (கழிக்குக): பங்கிலாப சமநிலைப்படுத்தல் ஒதுக்கிலிருந்தான மாற்றல்கள்/ அதற்கான மாற்றல்				(7,700,000)	6,000,000
2019 திசெம்பர் 31இல் உள்ளவாறான உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி - 9.25% (2018 - 9.50%)				(210,434,282)	(194,632,761)
அடுத்த ஆண்டிற்காக முன்கொண்டு செல்லப்படும் நிலுவை				**129,112**	**159,475**

பக்கங்கள் 157 இலிருந்து 205 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் நிதியியல் கூற்றின் மிக முக்கியமான பகுதிகளாகும்.
இந்நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு நாணயச் சபையே பொறுப்பாகும்.
நிதியியல் கூற்றுக்கள் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.
நாணயச் சபைக்காகவும் அதன் சார்பிலும்,

பேராசிரியர் டபிள்யு டி லக்ஷ்மன்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி
திகதி: 2020 பெப்புருவரி 26

ஏ ஜி யு திலகரத்ன
கண்காணிப்பாளர்
ஊழியர் சேமலாப நிதியம்

ஊழியர் சேமலாப நிதியம்
அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை	குறிப்பு	**2019** **ரூ.'000**	**2018** **ரூ.'000**
ஆண்டிற்கான இலாபம்		222,776,356	190,617,403
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்			
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக நிதியியல் சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதி மீதான தேறிய இலாபம்/ (நட்டம்)	13	(7,249)	-
ஆண்டிற்கான மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்		**222,769,107**	**190,617,403**

பக்கங்கள் 157 இலிருந்து 205 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் நிதியியல் கூற்றின் மிக முக்கியமான பகுதிகளாகும்.

இந்நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு நாணயச் சபையே பொறுப்பாகும்.

நிதியியல் கூற்றுக்கள் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.

நாணயச் சபைக்காகவும் அதன் சார்பிலும்,

பேராசிரியர் டபிள்யு டி லக்ஷ்மன் ஆளுநர் இலங்கை மத்திய வங்கி	ஏ ஜி யு திலகரத்ன கண்காணிப்பாளர் ஊழியர் சேமலாப நிதியம்

திகதி: 2020 பெப்புருவரி 26

ஊழியர் சேமலாப நிதியம்
நிதியியல் நிலைமைக் கூற்று

திசெம்பர் 31இல் உள்ளவாறு	குறிப்பு	2019 ரூ.'000	2018 ரூ.'000
சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள்	14	270,886	286,150
அருவச் சொத்துக்கள்	15	3,618	4,220
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பங்குரிமைச் சாதனங்கள்	16	9,502,643	9,914,892
இலாபம் அல்லது இழப்பினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பங்குரிமைச் சாதனங்கள்	17	65,907,115	64,937,663
பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் படுகடன் சாதனங்கள்	18	2,473,311,184	2,223,978,499
கையிருப்புக்கள்		10,646	10,020
பெறத்தக்க வட்டி		531,207	783,109
பெறத்தக்க பங்களிப்புக்கள்		13,468,914	12,574,614
ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்	19	628,308	1,057,336
காசு மற்றும் காசிற்குச் சமனானவைகள்	20	3,167,118	3,419,043
		2,566,801,639	**2,316,965,546**
பொறுப்புக்கள்			
செலுத்தத்தக்க கணக்குகள்	21	3,598	3,677
ஒன்றுசேர்ந்த செலவினங்கள்		285,576	249,485
ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள்	22	26,074,006	27,351,459
		26,363,180	**27,604,621**
மொத்தத் தேறிய சொத்துக்கள்		**2,540,438,459**	**2,289,360,925**
உறுப்பினர் நிலுவைகளினால் காட்டப்பட்டவை	23	2,497,609,596	2,254,194,450
ஒதுக்கங்கள்	24	42,699,751	35,007,000
பிடித்துவைக்கப்பட்ட இலாபம்		129,112	159,475
		42,828,863	**35,166,475**
நிதியத்தின் மொத்தத் தேறிய பெறுமதி		**2,540,438,459**	**2,289,360,925**

பக்கங்கள் 157 இலிருந்து 205 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் நிதியியல் கூற்றின் மிக முக்கியமான பகுதிகளாகும்.

இந்நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு நாணயச் சபையே பொறுப்பாகும்.

நிதியியல் கூற்றுக்கள் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.

நாணயச் சபைக்காகவும் அதன் சார்பிலும்,

பேராசிரியர் டபிள்யு டி லக்ஷ்மன்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

ஏ ஜி யு திலகரத்ன
கண்காணிப்பாளர்
ஊழியர் சேமலாப நிதியம்

திகதி: 2020 பெப்புருவரி 26

ஊழியர் சேமலாப நிதியம்
பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுக் கணக்கு

திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை	குறிப்பு	2019			2018
		நாணயச் சபை	தொழில் திணைக்களம்	மொத்தம்	மொத்தம்
		ரூ.'000	**ரூ.'000**	**ரூ.'000**	**ரூ.'000**
ஆண்டின் ஆரம்பத்திலிருந்த காசு மீதி		3,419,078	77,256	3,496,334	3,331,637
மொத்தப் பெறுகைகள்	25	405,609,727	640,660	406,250,387	353,088,148
மொத்தக் கொடுப்பனவுகள்	26	(405,861,651)	(672,697)	(406,534,348)	(352,923,451)
ஆண்டின் இறுதியிலிருந்த காசு மீதி		**3,167,154**	**45,219**	**3,212,373**	**3,496,334**

பக்கங்கள் 157 இலிருந்து 205 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் நிதியியல் கூற்றின் மிக முக்கியமான பகுதிகளாகும்.

இந்நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு நாணயச் சபையே பொறுப்பாகும்.

நிதியியல் கூற்றுக்கள் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.

நாணயச் சபைக்காகவும் அதன் சார்பிலும்,

பேராசிரியர் டபிள்யு டி லக்ஷ்மன்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

ஏ ஜி யு திலகரத்ன
கண்காணிப்பாளர்
ஊழியர் சேமலாப நிதியம்

திகதி: 2020 பெப்புருவரி 26

ஊழியர் சேமலாப நிதியம்
முதலீடுகளின் கூற்று

முதலீட்டின் வகுப்பு	குறிப்பு	முகப்புப் பெறுமதி ரூ.'000	கிரயம் ரூ.'000	சீர்மதிப்புப் பெறுமதி ரூ.'000	பதிவழிக்கப்பட்ட கிரயம் ரூ.'000	ஏட்டுப் பெறுமதி ரூ.'000
2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு						
திறைசேரி முறிகள்	18.1.1	2,381,927,053	2,262,943,811	2,455,954,830	2,382,459,525	2,382,459,525
திறைசேரி உண்டியல்கள்	18.1.2	8,250,000	7,586,701	7,908,078	7,941,165	7,941,165
கூட்டாண்மை படுகடன் சாதனங்கள்	18.2/18.6	40,871,549	40,876,549	40,401,187	41,844,551	41,841,330
நம்பிக்கைச் சான்றிதழ்கள்	18.3	424,395	263,750	406,532	406,532	406,518
நேர்மாற்று மீள்கொள்வனவு	18.4	15,600,000	15,600,000	15,630,972	15,630,972	15,630,972
நிலையான வைப்புக்கள்	18.5	25,000,000	25,000,000	25,031,914	25,031,914	25,031,674
பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனம்	16.1/17.1	-	83,695,978	66,268,769	83,695,978	66,268,769
பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனம்	16.2	-	9,640,989	9,140,989	9,640,989	9,140,989
		2,472,072,997	**2,445,607,779**	**2,620,743,271**	**2,566,651,626**	**2,548,720,942**
2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு						
திறைசேரி முறிகள்	18.1.1	2,110,854,987	1,970,722,277	2,017,224,894	2,084,497,740	2,084,497,740
திறைசேரி உண்டியல்கள்	18.1.2	36,321,220	33,398,583	34,413,982	34,733,240	34,733,240
கூட்டாண்மை படுகடன் சாதனங்கள்	18.2/18.6	42,962,299	42,962,502	41,989,973	43,658,095	43,654,523
நம்பிக்கைச் சான்றிதழ்கள்	18.3	1,230,857	831,235	1,132,594	1,132,594	1,132,558
நேர்மாற்று மீள்கொள்வனவு	18.4	26,325,000	26,325,000	26,350,903	26,350,903	26,350,903
நிலையான வைப்புக்கள்	18.5	32,500,000	32,500,000	33,609,718	33,609,718	33,609,534
பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனம்	17	-	80,467,243	64,937,663	80,467,243	64,937,663
பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனம்	16.2	-	10,414,892	9,914,892	10,414,892	9,914,892
		2,250,194,363	**2,197,621,733**	**2,229,574,618**	**2,314,864,426**	**2,298,831,054**

பக்கங்கள் 157 இலிருந்து 205 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் நிதியியல் கூற்றின் மிக முக்கியமான பகுதிகளாகும்.

இந்நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு நாணயச் சபையே பொறுப்பாகும்.
நிதியியல் கூற்றுக்கள் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.

நாணயச் சபைக்காகவும் அதன் சார்பிலும்

.....

பேராசிரியர் டபிள்யு டி லக்ஷ்மன்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி
திகதி: 2020 பெப்புருவரி 26

.....

ஏ ஜி யு திலகரத்ன
கண்காணிப்பாளர்
ஊழியர் சேமலாப நிதியம்

.....

ஊழியர் சேமலாப நிதியம்
காசுப்பாய்ச்சல் கூற்று

திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை	**2019** **ரூ.'000**	**2018** **ரூ.'000**
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்:		
முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வட்டி	241,250,083	198,799,665
பங்குரிமைப் பிணையங்களிலிருந்தான பங்கிலாபம் கட்டணங்கள்	5,474,453	3,045,185
மேலதிகக் கட்டணம் மற்றும் ஏனைய வருமானம்	282,880	402,031
பெறத்தக்கவைகளிலிருந்தான அறவீடுகள்	376,876	4,897,839
தொழிற்பாட்டுச் செலவினங்களின் கொடுப்பனவுகள்	(1,214,420)	(1,197,440)
முற்பணக் கொடுப்பனவுகள்	(5,061)	(3,220)
கடன் வழங்கியோர் மற்றும் ஏனைய கொடுபடத்தக்கவற்றின் தீர்ப்பனவுகள்	(3,389,714)	(4,226,687)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு	**242,775,097**	**201,717,372**
செலுத்தப்பட்ட வரிகள்	(36,180,154)	(5,437,603)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு	**206,594,943**	**196,279,770**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்:		
நிதியியல் சொத்துக்களில் முதலீடுகள்	(2,350,205,044)	(1,039,650,828)
முதலீடுகளின் முதிர்ச்சிகள்	2,111,474,111	805,119,460
நிதியியல் முதலீடுகளின் விற்பனை மீதான பெறுகைகள்	999,116	-
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு	(31,105)	(39,606)
முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு	**(237,762,922)**	**(234,570,974)**
நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்:		
பெறப்பட்ட பங்களிப்புக்கள்	157,247,216	144,996,456
பொதுவான வைப்புக் கணக்கு - தொழில் திணைக்களம்	44,228	14,301
உறுப்பினர்களுக்கான மீளளிப்புக்கள்	(126,330,170)	(106,497,162)
நிதியியல் நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு	**30,961,274**	**38,513,595**
காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு	**(206,705)**	**222,391**
ஆண்டின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவையும்	3,419,078	3,273,943
ஆண்டின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவையும் - சீராக்கங்களின் முன்	**3,212,373**	**3,496,334**
சீராக்கங்கள்:		
ஆண்டின் இறுதியிலுள்ள காசு மீதி - தொழில் திணைக்களம்	(45,219)	(77,256)
ஆண்டின் இறுதியிலுள்ள காசும் காசுக்குச் சமமானவையும் (குறிப்பு அ)	**3,167,154**	**3,419,078**
குறிப்பு அ		
திசெம்பர் 31இல் உள்ளவாறு காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளின் பகுப்பாய்வு		
கையிலுள்ள காசு	20	20
கொடுக்கல்வாங்கலிலுள்ள காசு	156,334	-
வங்கியிலுள்ள காசு	3,010,800	3,419,058
	3,167,154	**3,419,078**
பெறுமதி இழத்தலுக்கான ஏற்பாடு (-)	(36)	(35)
	3,167,118	**3,419,043**

ஊழியர் சேமலாப நிதியம்
பங்குரிமை மூலதனத்தில்/ உறுப்பினர் செல்வத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று

விபரங்கள்	உறுப்பினர்கள் நிலுவை	கட்டட ஒதுக்கு நிதி	தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்கு நிதி	இலாபச் சமநிலைப் படுத்துகின்ற ஒதுக்கு நிதி	பொதுவான ஒதுக்கு நிதி	முதலீட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	பிடித்து வைக்கப்பட்ட இலாபம்	மொத்தம்
	ரூ.'000	ரூ.'000	ரூ.'000	ரூ.'000	ரூ.'000	ரூ.'000	ரூ.'000	ரூ.'000
2017 திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை	**2,020,782,471**	**3,157,000**	**350,000**	**30,850,000**	**6,650,000**	**4,241,946**	**268,002**	**2,066,299,419**
இ.நி.அ.நியமம் 9இனைப் பின்பற்றுவதன் தாக்கம் (குறிப்பு 34.2)	-	-	-	-	-	(4,241,946)	2,206,626	(2,035,320)
இ.நி.அ.நியமம் 9இன் கீழ் மீளக்குறிப்பிடப்பட்ட ஆரம்ப நிலுவை	**2,020,782,471**	**3,157,000**	**350,000**	**30,850,000**	**6,650,000**	**-**	**2,474,628**	**2,064,264,098**
பிடித்துவைக்கப்பட்ட இழப்பிற்பான ஆரம்ப நிலுவைச் சீராக்கம் - தொழில் திணைக்களம்	-	-	-	-	-	-	(3,678)	(3,678)
சீராக்கப்பட்ட ஆரம்ப நிலுவை	**2,020,782,471**	**3,157,000**	**350,000**	**30,850,000**	**6,650,000**	**-**	**2,470,950**	**2,064,260,420**
ஆண்டிற்கான தேறிய இலாபம் - 2018	-	-	-	-	-	-	190,617,403	190,617,403
2018இற்கான தேறிய பங்களிப்பு	38,779,219	-	-	-	-	-		38,779,219
2018இல் மீளளிப்புக்கள் மீது செலுத்தப்பட்ட உறுப்பினர் வட்டி	-	-	-	-	-	-	(4,296,117)	(4,296,117)
செலுத்தப்படத்தக்க உறுப்பினர் வட்டி (2018: 9.50%)	194,632,761	-	-	-	-	-	(194,632,761)	-
இலாபச் சமநிலைப்படுத்தல் ஒதுக்கிலிருந்தான மாற்றல்கள்	-	-	-	(6,000,000)	-	-	6,000,000	-
2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை	**2,254,194,451**	**3,157,000**	**350,000**	**24,850,000**	**6,650,000**	**-**	**159,475**	**2,289,360,926**
2019ஆம் ஆண்டுக்கான தேறிய இலாபம்	-	-	-	-	-	-	222,776,356	222,776,356
பட்டியலிடப்படாத பங்குகளின் விற்பனை மீதான மூலதன இலாபம்	-	-	-	-	-	-	90,000	90,000
ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக நிதியியல் சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதி மீதான தேறிய இலாபம்/ (இழப்பு)	-	-	-	-	-	(7,249)	-	(7,249)
2019ஆம் ஆண்டிற்கான தேறிய பங்களிப்புக்கள்	32,980,863	-	-	-	-	-	-	32,980,863
2019இல் மீளளிப்புக்கள் மீது செலுத்தப்பட்ட உறுப்பினர் வட்டி	-	-	-	-	-	-	(4,762,437)	(4,762,437)
செலுத்தப்படத்தக்க உறுப்பினர் வட்டி (2019: 9.25%)	210,434,282	-	-	-	-	-	(210,434,282)	-
இலாபச் சமநிலைப்படுத்தல் ஒதுக்கிலிருந்தான மாற்றல்கள்	-	-	-	7,700,000	-	-	(7,700,000)	-
2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை	**2,497,609,596**	**3,157,000**	**350,000**	**32,550,000**	**6,650,000**	**(7,249)**	**129,112**	**2,540,438,459**

ஊழியர் சேமலாப நிதியம்
நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1. கம்பனித் தகவல்கள்

1.1 *அறிக்கையிடுகின்ற நிறுவனம்*

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊ.சே. நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் ("ஊ.சே. நிதியம்" அல்லது "நிதியம்") என்பது இலங்கையிலுள்ள தனியார் மற்றும் அரசுசார் துறை ஊழியர்களுக்கான கட்டாயப் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்றாகும். தொழில் ஆணையாளர் நிதியத்தின் பொது நிருவாகத்தராகச் செயற்படுகின்ற வேளையில், மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் நிதியத்தின் கட்டுக்காப்பாளராகச் செயற்படும் விதத்தில் அதிகாரம், கடமைகள் மற்றும் பொறுப்பாண்மைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது, சட்டத்தின் மூலம் நாணயச் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கு அதற்கு வசதியளிக்கின்றது.

2. கணக்கீட்டிற்கான அடிப்படை

2.1 *இணங்குவிப்புக் கூற்று*

நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் ஆக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கவும் (இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள்) 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊ.சே. நிதியச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கிச் செல்லும் விதத்திலும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊ.சே.நிதியச் சட்டத்தின் 5(1)(ஏ) மற்றும் (ஐ)ஆம் பிரிவுகளின் நியதிகளில் நாணயச் சபை, நிதியம் தொடர்பான பொதுவான கணக்கினைப் பேணுமாறும் பின்வரும் நிதியியல் கூற்றுக்களை ஆண்டுதோறும் தயாரிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அ) வருமானம் மற்றும் செலவினக் கூற்று,

ஆ) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று,

இ) பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் கூற்று, மற்றும்

ஈ) ஒவ்வொரு வகை முதலீட்டினதும் பெறுமதியினைக் காட்டும் முகப் பெறுமதி, கொள்வனவு விலை மற்றும் சீர்மதிப்புப் பெறுமதி என்பனவற்றைக் காட்டும் முதலீட்டுக் கூற்று

2.2 நிதியியல் கூற்றிற்கான பொறுப்பாண்மை

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊ.சே.நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை நிதியத்தின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் பொறுப்பாக இருக்கின்றது.

2.3 நிதியியல் கூற்றுக்களுக்கான நாணயச் சபையின் ஒப்புதல்

2019 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களை 2020 பெப்புருவரி 26ஆம் நாளன்று வெளியிடுவதற்கு நாணயச் சபையினால் ஒப்புதல் வழங்கப்பட்டது.

2.4 தயாரிப்பிற்கான அடிப்படை

சீர்மதிப்புப் பெறுமதியில் அல்லது இலங்கை நிதியியல் அறிக்கையிடல் 09 நிதியியல் சாதனங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் 26 ஓய்வுகால நன்மைத் திட்டங்களின் கணக்கீடு மற்றும் அறிக்கையிடல்

என்பனவற்றின் தேவைப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு அதற்கேற்ற விதத்தில் பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட்டிருக்கின்ற நிதியியல் சொத்துக்கள் நீங்கலாக, நிதியியல் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவு அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

2.5 *தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்*

நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள் நிதியத்தின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமான இலங்கை ரூபாய்களில் காட்டப்படுகின்றன.

2.6 *பொருண்மியத் தன்மையின் பயன்பாடு, எதிரீடு செய்தல் மற்றும் முழுத்தானமாக்குதல்*

பொருண்மியத் தன்மை மற்றும் கூட்டுதல்

ஒத்த விடயங்களின் ஒவ்வொரு பொருண்மிய வகுப்பும் நிதியியல் கூற்றுக்களில் தனித்தனியாகக் காட்டப்பட்டுள்ளன. வேறுபட்ட தன்மையைக் கொண்ட விடயங்கள் அல்லது தொழிற்பாடுகள், அவை பொருண்மியமற்றனவாக இருந்தாலொழிய தனித்தனியாகக் காட்டப்படுகின்றன.

எதிரீடு செய்தல்

நிதியியல் கூற்றுக்களிலுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வருமானம் மற்றும் செலவுகள் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களினால் தேவைப்படுத்தப்பட்டிருந்தால் அல்லது அனுமதிக்கப்பட்டிருந்தாலொழிய, எதிரீடு செய்யப்படமாட்டா.

முழுத்தானமாக்குதல்

வேறுவிதமாக எடுத்துக்காட்டப்பட்டாலன்றி, நிதியியல் கூற்றுக்களிலுள்ள எண் தொகைகள் கிட்டிய ஆயிரம் ரூபாய்களுக்கு முழுத்தானமாக்கப்படுகின்றன.

2.7 *நியாயப்படுத்தல்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களின் பயன்பாடுகள்*

நிதியத்தின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது நாணயச் சபையானது நியாயப்படுத்தல்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்கின்றது. அது கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்தினது சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவினங்கள் மற்றும் எதிர்பாராத பொறுப்புக்களின் வெளிப்படுத்துகை என்பனவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளையும் பாதிக்கின்றது. நியாயப்படுத்தல்களும் மதிப்பீடுகளும் சூழ்நிலைகளின் கீழ் நியாயமானவை என நம்பப்படும் எதிர்பார்ப்புக்கள் உட்பட வரலாற்று ரீதியான அனுபவத்தினையும் ஏனைய காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. எனவே, உண்மையான அனுபவமும் பெறுபேறுகளும் இந்நியாயப்படுத்தல்களிலிருந்தும் மதிப்பீடுகளிலிருந்தும் வேறுபடலாம். மதிப்பீடுகளும் அடிப்படை எடுகோள்களும் தற்பொழுது இடம்பெற்றுவரும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுவதுடன் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் சாத்தியமான அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

இந்நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கையில், குறிப்பிடத்தக்களவு நியாயப்படுத்தல்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் பயன்படுத்தப்பட்டிருக்குமிடத்து முகாமைத்துவம் பின்வரும் விடயங்களைப் பரிசீலனையில் கொள்கிறது.

தொடர்ந்து செல்லும் கரிசனைகள்

வியாபாரம் தொடர்ந்து செல்வதற்கான இயலாற்றலை நிதியம் கொண்டிருப்பதனை முகாமைத்துவம் மதிப்பீடு செய்திருப்பதுடன் கிட்டிய எதிர்காலத்தில் வியாபாரத்தினைத் தொடர்வதற்கான மூலவளங்களையிட்டும் அது திருப்தியடைந்திருக்கிறது. எனவே, நிதியியல் கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் கரிசனைகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

மேலும், குறிப்பிட்ட கணக்கீட்டு நியாயப்படுத்தல்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பன பயன்படுத்தப்பட்டமைக்குப் புறம்பாக, பின்வருவன எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

- நிதியியல் சாதனங்களின் மதிப்பீடு
- சொத்துக்களின் பெறுமதி இழத்தல்
- சொத்துக்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் தேய்மானம்
- பொறுப்புக்களுக்கான ஏற்பாடு

2.8 *அறிக்கையிடும் காலத்திற்குப் பின்னர் நிகழ்ந்த சம்பவங்களும் எதிர்பாராத பொறுப்புக்களும்*

நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் நிகழ்ந்த அனைத்துப் பொருண்மை வாய்ந்த சம்பவங்களும் பரிசீலனையில் கொள்ளப்பட்டுள்ளன. அறியவந்த அனைத்துப் பொறுப்புக்களுக்காக ஏற்பாடுகளும் தொடர்பான வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

3.1 வருமானம் மற்றும் செலவினங்களை அங்கீகரித்தல்

வருமானம் என்பது பொருளாதார நன்மைகள் நிதியத்திற்குப் பாயக்கூடிய சாத்தியப்பாடுகளைக் கொண்ட அளவிற்கும் வருமானத்தினை நம்பகமாக அளவிடக்கூடிய அளவிற்கும் அங்கீகரிக்கப்படுகின்றது. செலவினங்களானது உறப்பட்ட செலவு மற்றும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயத்தின் வருவாய் என்பனவற்றிற்கிடையிலான நேரடித் தொடர்புகளின் அடிப்படையில் வருமானம் மற்றும் செலவினக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே. நிதியத் திணைக்களத்தினாலும் தொழில் திணைக்களத்தின் ஊ.சே. நிதியப் பிரிவினாலும் நிதியத்தினை முகாமைப்படுத்துவது தொடர்பில் ஏற்படும் அனைத்துச் செலவினங்களும் நிதியத்தின் செலவினங்களாகக் கருதப்பட்டு அதன் மீது விதிக்கப்படுகின்றன.

3.1.1 வட்டி வருமானம்

பெறுமதி இழப்புக்களைக் கழித்த உண்மையான கொள்வனவு விலைகளின் அடிப்படையில், பயனுறு விளைவு முறையினைப் பயன்படுத்தி அட்டுறு அடிப்படையில் அனைத்து வட்டி உழைக்கும் நிதியியல் சாதனங்களுக்குமான வட்டி வருமானம், வருமானம் மற்றும் செலவினக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படுகின்றது. வட்டி வருமானமானது நறுக்கு வட்டி வருமானம் மற்றும் நிதியியல் சாதனங்களின் கழிவிடல் தீர்ப்பனவு அல்லது மிகை மதிப்பு மீது ஏற்படும் ஏதேனும் இலாபம் அல்லது இழப்பு என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

3.1.2 பங்கிலாபங்கள்

நிதியம் கொடுப்பனவினைப் பெறுவதற்கான உரிமை நிலைநிறுத்தப்படுகின்ற வேளையில் பங்கிலாப வருமானமானது அங்கீகரிக்கப்படுகின்றது. பங்கிலாப வருமானம் தேறிய ஏதேனும் அறவிடமுடியாத பிடித்துவைத்தல் வரிகளில் காட்டப்படுகின்றது.

3.1.3 இலாபம் அல்லது இழப்பூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் முதலீடுகளின் விற்பனை மீதான இலாபம்

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்ட நிதியியல் முதலீடுகளின் விற்பனை மீதான இலாபம் அரச பிணையங்களின் விற்பனை மீது பெறப்பட்ட வர்த்தக இலாபங்களையும் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட பங்குகளையும் பட்டியலிடப்பட்ட தொகுதிக் கடன்களையும் உள்ளடக்கியிருப்பதுடன் வருமானம் மற்றும் செலவினக் கூற்றில் இலாபம் அல்லது இழப்பூடாக சீர்மதிப்புப் பெறுமதிகளில் நிதியியல் முதலீடுகளின் விற்பனையாக நேரடி வருமானத்தில் காட்டப்படுகின்றது.

3.1.4 இலாபம் அல்லது இழப்பூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் முதலீடுகளின் அகற்றல் மீதான இலாபம்

விற்பனைக்குக் கிடைக்கத்தக்கது என வகைப்படுத்தப்பட்ட பங்குரிமை மூலதனப் பிணையங்களிலுள்ள முதலீடுகளின் விற்பனை மீது தேறிய மூலதன இலாபங்களை உள்ளடக்கிய விற்பனைக்குக் கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகளின் விற்பனை மீதான இலாபம், வருமான மற்றும் செலவினக் கூற்றின் விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாக இருக்கும் நிதியியல் முதலீட்டு விற்பனையாக நேரடி வருமானத்தில் காட்டப்படுகின்றது.

3.1.5 இலாபம் அல்லது இழப்பூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி மீதான இலாபம்

அரச பிணையங்கள், விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்கள் என்பனவற்றின் சீர்மதிப்புப் பெறுமதியின் (சந்தைப்படியான பெறுமதி) மீதான தேறல் செய்யப்படாத இலாபத்தினை உள்ளடக்கிய வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்ட நிதியியல் முதலீடுகள் மீதான சீர்மதிப்புப் பெறுமதியின் மாற்றங்கள், வருமானம் மற்றும் செலவினக் கூற்றில் வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்ட நிதியியல் முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதியின் மீதான வருவாயாக இலாபம் அல்லது இழப்பில் காட்டப்படுகின்றன.

3.1.6 ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதிகளில் நிதியியல் முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி மீதான இலாபம்

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதிகளில் நிதியியல் முதலீடுகளின் மீதான சீர்மதிப்புப் பெறுமதி மாற்றங்கள் பட்டியலிடப்படாத பங்குகளின் சீர்மதிப்புப் பெறுமதி மீதான (சந்தைப்படியான பெறுமதி) தேறாத இலாபங்களை உள்ளடக்குகின்றன. வேறு ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக்கூற்றிலுள்ள சீர்மதிப்புப் பெறுமதிகளில் நிதியியல் முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி மீதான இலாபம் அல்லது இழப்பாக மற்றைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் காட்டப்படுகின்றன.

3.1.7 ஆளணிச் செலவுகள்

ஆளணிச் செலவுகள் இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே. நிதியத் திணைக்களம் மற்றும் தொழில் திணைக்களத்தின் ஊ.சே. நிதியப் பிரிவு ஆகிய இரண்டினாலும் உறப்பட்ட அனைத்து அலுவலர்களுடனும் தொடர்பான செலவுகளை உள்ளடக்குகிறது. இந்நிதியமானது தனியான ஓய்வூதிய நிதியத்தினையோ அல்லது தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டத்தினையோ பேணவில்லை.

3.1.8. வருமான வரி

தற்போதைய மற்றும் முன்னைய ஆண்டிற்கான தற்போதைய வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் வரிவிதிப்பு அறவிடுவதற்கு அல்லது அதிகாரிகளுக்கு செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகையில் கணிக்கப்படுகின்றன. தொகையினை கணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வரிவீதங்களும் வரிச் சட்டங்களும் அறிக்கையிடும் நாளன்று இயற்றப்பட்டனவாக அல்லது அதன்பின்னர் இயற்றப்பட்டனவாக இருக்கும்.

நிதியமானது 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கிணங்க 2018 மார்ச்சு 31 வரை 10 சதவீதத்தில் வருமான வரியினைச் செலுத்தப் பொறுப்புடையதாகும். 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க புதிய உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்படி 2018 ஏப்பிறல் 01ஆம் நாளிலிருந்து நிதியம் 14 சதவீதத்தில் வருமானவரியினைச் செலுத்த பொறுப்புடையதாகும்.

ஊ.சே. நிதியம் திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்கள் சொத்துப்பட்டியலினை வரிக்குப் பின்னைய நிறையேற்றப்பட்ட சராசரி செலவில் மதிப்பிடும் விதத்திலும் அதன் பின்னர் தேய்மானம் செய்யும் விதத்திலும் அதன் கணக்கீட்டுக் கொள்கையினை மாற்றிவிட்டமையின் காரணமாக (2006.09.01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில்), தேய்மான இலாபம் வரியைக் கழித்து பதிவு செய்யப்பட்டது.

இதன்படி, ஆண்டிற்கான திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்கள் மீது உழைக்கப்பட்ட வருமானத்திற்கு ஏற்புடைத்தான பிடித்துவைத்தல் வரியின் விகிதமானது தேய்மான இலாபம் மற்றும் வருமான வரிச் செலவினம் என்பன பற்றிய நியாயமான பார்வையொன்றினை வழங்கும் விதத்தில் தேய்மான இலாபக் கணக்கிற்கு மீண்டும் சேர்க்கப்பட்டது. எனினும் புதிய உண்ணாட்டரசிறைச் சட்டத்துடன் அரச பிணையங்கள் மீதான பிடித்துவைத்தல் வரி ஒழிக்கப்பட்டமையின் காரணமாக பிடித்துவைத்தல் வரியின் தேய்மானம் 2018 ஏப்பிறல் 01 இலிருந்து பரிசீலனையில் கொள்ளப்படவில்லை.

3.2 சொத்துக்கள்

3.2.1 நிதியியல் சாதனங்கள்

3.2.1.1 ஆரம்ப அங்கீகரிப்பு, வகைப்படுத்தல் மற்றும் அதன் பின்னரான அளவு முறைகள்

ஊழியர் சேமலாப நிதியம் அதன் நிதியியல் சொத்துக்களை பின்வரும் அளவு முறை வகைகளுக்குள் வகைப்படுத்துகிறது:

(i) சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படவுள்ளவை (ஒன்றில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானமாக அல்லது இலாபம் அல்லது இழப்பு ஊடாக); அத்துடன்

(ii) தேய்மானச் செலவில் அளவிடப்படவுள்ளவை

வகைப்படுத்தலானது நிதியியல் சொத்துக்களின் முகாமைத்துவத்திற்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் வியாபார மாதிரியின் மீதும் நிதியியல் சொத்துக்களின் காசுப் பாய்ச்சல்களின் ஒப்பந்த ரீதியான நியதிகளிலும் தங்கியிருக்கிறது.

(i) பதிவளிக்கப்பட்ட கிரய "படுகடன் சாதனங்களில்" அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள்

<u>படுகடன் சாதனங்கள்</u>

படுகடன் சாதனங்களிலிருந்தான முதலீடுகள் பின்வருவனவற்றை கொண்டிருக்குமிடத்து அவை பதிவளிக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

- குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் காசுப்பாய்ச்சலை அதிகரிக்கின்ற ஒப்பந்த நியதிகள் வெளிநின்ற முதல் தொகைமீதான முதலினதும் வட்டியினதும் ஏகக் கொடுப்பனவுகளை பிரதிபலிக்கின்றன.
- ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல் சேகரிப்பினை வைத்திருப்பதன் மூலம் குறிக்கோள்கள் எய்தப்பட்டு வியாபார மாதிரிகளுக்குள் வைத்திருக்கப்பட்டவை.

இப்படுகடன் சாதனங்கள் ஆரம்பத்தில் சீர்மதிப்புப் பெறுமதியினையும் பின்னர் தேய்மானச் செலவில் அளவிடப்பட்ட கொடுக்கல்வாங்கல் செலவினையும் நேரடியாக உள்ளடக்குகின்றன. கொடுகடன் பெறுமதி இழப்பு அளவுமுறை கீழேயுள்ள குறிப்பு 3.2.1.2 நிதியியல் சொத்துக்களின் பெறுமதி இழப்பில் விபரிக்கப்பட்டுள்ள எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பின் மூன்று கட்டங்களை அடிப்படையாக கொண்டிருக்கும்.

(ii) ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள்.

<u>படுகடன் சாதனங்கள்</u>

படுகடன் சாதனங்களிலிருந்தான முதலீடுகள் பின்வருவனவற்றைக் கொண்டிருக்குமிடத்து அவை ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

- குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் காசுப்பாய்ச்சலை அதிகரிக்கின்ற ஒப்பந்த நியதிகள் வெளிநின்ற முதல் தொகை மீதான முதலினதும் வட்டியினதும் முழுமையான கொடுப்பனவுகளை பிரதிபலிக்கின்றன; அத்துடன்

- ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலை சேகரித்தல் மற்றும் நிதியியல் சொத்துக்களை விற்பனை செய்தல் மூலம் குறிக்கோள்கள் எய்தப்பட்டு வியாபார மாதிரிகளுக்குள் வைத்திருக்கப்பட்டன.

இப்படுகடன் சாதனங்கள் ஆரம்பத்தில் சீர்மதிப்புப் பெறுமதியுடனும் பின்னர் தேய்மானச் செலவில் அளவிடப்பட்டு கொடுக்கல்வாங்கல் செலவினாலும் அங்கீகரிக்கப்படுகிறது. சீர்மதிப்புப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து தோன்றுகின்ற இலாபம் மற்றும் இழப்புக்கள் பங்குரிமையின் வேறானதொரு பிரிவில் அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றன. பெறுமதி இழப்புக்கள் அல்லது திரும்பல்கள், வட்டி வருமானம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி இலாபம் மற்றும் இழப்புக்கள் இலாபம் மற்றும் இழப்புக்களில் அங்கீகரிக்கப்படுகின்றன. அகற்றப்படுவதனைத் தொடர்ந்து, முன்னர் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றுசேர்ந்த இலாபம் அல்லது இழப்பு பங்குரிமையிலிருந்து வருமானக்கூற்றிற்கு மீள் வகைப்படுத்தப்படுகிறது.

கொடுகடன் பெறுமதி இழப்பின் அளவீடானது, தேய்மானச் செலவில் நிதியியல் சொத்துக்களுக்கு பிரயோகிக்கப்பட்டவாறு மூன்று கட்ட எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு மாதிரியினை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு மாதிரி, குறிப்பு 3.2.1.2இல் நிதியியல் சொத்துக்களின் பெறுமதி இழப்பின் கீழ் விபரிக்கப்படுகிறது.

<u>பங்குரிமைச் சாதனங்கள்</u>

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 3இன் "வியாபார இணைப்பு" இற்கு ஏற்புடைத்தான "வியாபார இணைப்புக்கள்" வர்த்தகப்படுத்தலுக்கோ அல்லது எதிர்பாராத இழப்பீடுகளுக்காகவோ வைத்திருக்கப்படாத பங்குரிமைகளிலுள்ள முதலீடுகள் என ஊழியர் சேமலாப நிதியத்தினால் அங்கீகரிக்கப்பட்டவைகள். மற்றைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றவிடத்து மாற்றமுடியாத தேர்வுகள் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. மற்றைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானமூடாக சீர்மதிப்புப் பெறுமதியினைப் பெற்றுக்கொள்கின்ற மாற்றமுடியாத தேர்வொன்றாக முகாமைத்துவம் கருதாதவிடத்து சொத்துப்பட்டியல் செலுத்தப்படாத முதலீடு போன்றவற்றின் மூலம் இலாபம் மற்றும் இழப்பினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படல் வேண்டும்.

மற்றைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் காட்டப்பட்டுள்ள தொகைகள் அதன் பின்னர் இலாபம் அல்லது நட்டத்திற்கு மாற்றல் செய்யப்படவில்லை. அத்தகைய முதலீடுகள் மீதான பங்கிலாபங்கள் இலாபம் அல்லது இழப்பில் அங்கீகரிக்கப்படுகின்றன.

(iii) இலாபம் அல்லது இழப்பூடான சீர்மதிப்புப் பெறுமதியிலுள்ள விடயங்கள்

இலாபம் அல்லது இழப்பூடான சீர்மதிப்புப் பெறுமதியிலுள்ள விடயங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

(அ) வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்படும் விடயங்கள்;

நிதியியல் சாதனமொன்று கிட்டிய அண்மைக் காலத்தில் விற்பனை செய்யும் அல்லது மீள்கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக கையேற்கப்பட்டிருக்குமிடத்து அல்லது

உறப்பட்டிருக்குமிடத்து அல்லது நிதியியல் சாதனங்களின் சொத்துப்பட்டியலை உருவாக்குவதற்காக வைத்திருக்கப்படுமிடத்து அவை நிதியியல் சாதனங்கள் என வகைப்படுத்தப்பட்டு ஒன்றாக முகாமைப்படுத்தப்படுவதுடன் சில குறுங்கால இலாபங்களைப் பெற்றுக்கொள்வதற்கான அல்லது தகைமைப் பாதுகாப்பு தொடர்புகளைக் கொண்டிராத பெறுதிகளாகக் காணப்படுகின்ற சான்றுகளைக் கொண்டுள்ளன.

வர்த்தகப்படுத்தலுக்கான பெறுதிகளும் வர்த்தகப்படுத்துவதற்கான பிணையங்களும் வர்த்தகப்படுத்துவதற்காக வைத்திருக்கப்படுபவை என வகைப்படுத்தப்படுவதுடன் சீர்மதிப்புப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன.

(ஆ) ஆரம்ப அங்கீகரிப்பின் மீது இலாபம் அல்லது இழப்பினூடாக சீர்மதிப்புப் பெறுமதியாக விசேடமாக குறித்துரைக்கப்பட்ட விடயங்கள்

ஆரம்ப அங்கீகரிப்பினைத் தொடர்ந்து, நிதியியல் சாதனங்களை இலாபம் அல்லது இழப்பினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டனவாக குறித்துரைக்கமுடியும். நிதியியல் சொத்தொன்று இலாபம் அல்லது இழப்பினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் மாத்திரம் குறித்துரைக்கப்படலாம். அவ்வாறு செய்யும் பொழுது வேறுபட்ட அடிப்படையில் நிதியியல் சொத்துக்களை அல்லது பொறுப்புக்களை அளவிடுவதிலிருந்து தோன்றக்கூடியவை தவிர்ந்த அளவீடுகளை அல்லது முரண்பாடுகளை (அதாவது கணக்கீடுகளின் பொருத்தப்பாடொன்றினை நீக்குதல்) நீக்கிவிடும் அல்லது கணிசமானளவிற்குக் குறைத்துவிடும்.

(இ) முதல் மற்றும் வட்டியின் முழுமையான கொடுப்பனவினை எடுத்துக்காட்டாத, ஒப்பந்த நியதிகளுடன் கூடிய படுகடன் சாதனங்கள்

இலாபம் அல்லது இழப்பினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வைத்திருக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் ஆரம்பத்தில் சீர்மதிப்புப் பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. கொடுக்கல்வாங்கல் செலவுடன் வருமானக் கூற்றில் உறப்பட்டவைகளாக அங்கீகரிக்கப்படுகின்றன. அதன்பின்னர், சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டு ஏதேனும் இலாபம் அல்லது இழப்பு காணப்படுமிடத்து அவை வருமானக்கூற்றில் அவை தோன்றியவாறு அங்கீகரிக்கப்படுகின்றன.

நிதியியல் சொத்துக்கள் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுமிடத்து, கொடுகடன் மதிப்பீட்டுச் சீராக்கம் இணைத்தரப்பினர்கள் கொடுகடன் நன்மதிப்பினைப் பிரதிபலிக்கும் விதத்தில் உள்ளடக்கப்பட்டு கொடுகடன் இடர்நேர்வுகளில் ஏற்படும் மாற்றங்களுக்குக் காரணமான சீர்மதிப்புப் பெறுமதியிலான அசைவுகள் பிரதிபலிக்கப்படுகின்றன.

பெறுதி நிதியியல் சாதனங்களும் பாதுகாப்புக் கணக்கீடும்

பெறுதி நிதியியல் சாதனங்கள் ஒப்பந்த ரீதியானவையாக இருப்பதுடன் அவற்றின் பெறுமதி ஒன்று அல்லது அதற்கும் கூடுதலான விலைகள் சுட்டெண்கள் அல்லது வேறு மாறிகள் மற்றும் பரஸ்பரபரிமாற்றம், முன்னோக்கிய வீத உடன்படிக்கைகள், முற்பேரங்கள் மற்றும் தேர்வுகளிலிருந்து பெறப்படுகின்றன.

அனைத்துப் பெறுதிகளும் சீர்மதிப்புப் பெறுமதிகளில் ஐந்தொகையில் அங்கீகரிக்கப்படுவதுடன், காத்திரமான பாதுகாப்பு தொடர்களில் ஒரு பகுதியாக குறித்துரைக்கப்பட்ட பெறுதிகள் தவிர்ந்தவை வர்த்தகப்படுத்தலுக்கானவையாக வகைப்படுத்தப்பட்டன. பெறுதிகளின் ஏட்டுப்பெறுமதி, ஒப்பந்தத்தின் ஆயுள் காலம் முழுவதும் சீர்மதிப்புப் பெறுமதியில் மீள அளவிடப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதிகள் எதிர்க்கணியமாக இருக்குமிடத்து பொறுப்புக்களாகக் கொண்டு செல்லப்படுகின்றன.

3.2.1.2 நிதியியல் சொத்துக்களின் பெறுமதி இழப்பு

ஊழியர் சேமலாப நிதியம், இலாபம் அல்லது இழப்பினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படாத நிதியியல் சொத்துக்களின் பின்வரும் வகைகளுக்காக எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களை அளவிடுவதற்காக மூன்று கட்டங்களிலான அணுகுமுறையினை பிரயோகிக்கின்றது:

- தேய்மானச் செலவிலும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்திலும் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்கள்;
- கடன் கடப்பாடுகள்; அத்துடன்
- நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்கள்

பங்குரிமை மூலதன முதலீடுகளின் மீது எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்கள் அங்கீகரிக்கப்படவில்லை.

ஆரம்ப அங்கீகரித்தலின் பின்னர், கொடுகடன் இடர்நேர்வில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் பின்வரும் மூன்று கட்டங்களினூடாக நிதியியல் சொத்துக்கள் மாற்றப்படுகின்றன.

கட்டம் 1: 12 - மாதங்கள் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்கள்

ஆரம்ப அங்கீகரித்தலுக்குப் பின்னர் கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இல்லாதிருக்குமிடத்து வெளிப்படுத்தல்களும் அங்கீகரித்தலினை அடுத்து கொடுகடன் இழப்புக்களாக அங்கீகரிக்கப்பட்டவையும் ஆயுள்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடனின் ஒரு பகுதியும் அடுத்த 12 மாதங்களுக்குள் நிகழ்வதற்கான செலுத்தத்தவறிய நிகழ்தகவுகளுடன் இணைந்தவையாக அங்கீகரிக்கப்பட்டன.

எவருடைய கொடுகடன்கள் குறிப்பிடத்தக்களவிற்குத் தேய்வடையவில்லையோ அந்த வாடிக்கையாளர்களிடமிருந்தான 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பினை ஊழியர் சேமலாப நிதியம் தீர்மானிக்கிறது.

கட்டம் 2: ஆயுள்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு - கொடுகடன் பெறுமதி இழக்கப்படவில்லை.

வெளிப்படுத்துகைகளுக்காக ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படுமிடத்து, பெறுமதி இழப்பு வரவு வைக்கப்படாதவிடத்து ஆயுள்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு (அதாவது நிதியியல் சொத்துக்களின் எஞ்சிய ஆயுள்காலப் பகுதி பிரதிபலிக்கப்படுகிறது) அங்கீகரிக்கப்படுகிறது.

ஊழியர் சேமலாப நிதியத்தின் கொள்கைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் BBB- இற்குக் கீழ் தரமிடப்பட்டவைகள் முதலீட்டு தரமல்லா முதலீடுகள் என பரிசீலனையில் கொள்ளப்படுவதுடன் ஊழியர் சேமலாப நிதியம் அத்தகைய முதலீடுகளை கொடுகடன் இடர்நேர்வு உறப்பட்ட கொடுகடன் இடர்நேர்வின் குறிப்பிடத்தக்க தேய்வினைக் கொண்டதாக கருதுகிறது. அத்தகைய முதலீடுகள் நுகர்வுகால எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்கால இழப்புகளுக்கான கணிப்புக்களாகப் பரிசீலனையில் கொள்ளப்படுகின்றன.

மேலும், முதலீட்டு தரத்தின் தரமிடலுக்குள்ளேயான அசைவு கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க தேய்வினை குறிப்பிடுகின்றது. குறிப்பிடத்தக்க தேய்வுகள் சாதனத்தின் உருவாக்கத்திலிருந்து இணைத்தரப்பினரின் இசைந்து வெளிவாரி கொடுகடன் தரமிடலில் இரண்டு வெட்டுப்புள்ளிக்குக் கீழான தரமிடலினூடாக அளவிடப்படுகின்றன.

நாட்டிற்கான சாதனங்கள் குறிப்பிடத்தக்க தேய்வுகள் இணைத்தரப்பினரின் வெளிவாரி கொடுகடன் தரமிடலில் நான்கு வெட்டுப்புள்ளிக்குக் குறைவான தரமிடலாக வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.

கட்டம் 3: ஆயுள் காலம் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு - கொடுகடன் பெறுமதி இழப்பு

அச்சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் மீது பாதகமான தாக்கத்தினை கொண்டிருக்கின்ற ஒன்று அல்லது கூடுதலான நிகழ்வுகளின் போது வெளிப்படுத்துகைகள் கொடுகடன் பெறுமதி இழப்புக்களாக மதிப்பிடப்படுகின்றன. கொடுகடன் பெறுமதி இழப்புக்களாக மாறுகின்ற வெளிப்படுத்துகைகளுக்காக ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு அங்கீகரிக்கப்படுவதுடன், வட்டி வருமானம் மொத்த கொண்டுசெல் தொகையினைவிட பெறுமானத் தேய்வு செலவிற்கான (ஒதுக்கங்கள் நீங்கலாக) பயனுறு வட்டி வீதங்களைப் பிரயோகிப்பதன் மூலம் கணிக்கப்படுகிறது.

பெறுமதியிழத்தலுக்கான கட்டத்தினைத் தீர்மானித்தல்

ஒவ்வொரு அறிக்கையிடும் நாளன்றும், அறிக்கையிடுகின்ற நாளுக்கும் ஆரம்ப அங்கீகரிப்பு நாளுக்குமிடையில், எதிர்பார்க்கப்படும் ஆயுள் காலத்தின் போது நிகழ்கின்ற செலுத்தத்தவறும் இடர்நேர்வுகளுடன் ஒப்பிடுவதன் மூலமான ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் வெளிப்படுத்துகைகளுக்கான கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் ஏற்பட்டுள்ளனவா என்பதனைக் கண்டறிவதற்காக ஊழியர் சேமலாப நிதியம் மதிப்பீடுகளை மேற்கொள்கிறது. ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பானது, இந்நோக்கத்திற்காக நியாயமற்ற செலவுகள் அல்லது இந்நோக்கத்திற்கான முயற்சிகளும் இல்லாமல் கிடைக்கின்ற நியாயமானதும் ஆதரவாக இருக்கத்தக்கதுமான தகவல்களைப் பரிசீலனையில் கொள்கிறது. இது கணியம்சார் மற்றும் தரம்சார் தகவல்களையும் அத்துடன் முன்னோக்கிய பகுப்பாய்வுகளையும் உள்ளடக்குகிறது.

ஊழியர் சேமலாப நிதியம், வெளிப்படுத்துகை மீதான கொடுகடன் இடர்நேர்வு தனிப்பட்ட அல்லது ஒன்றுசேர்ந்த அடிப்படையிலான குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்துள்ளது என்பதனை மதிப்பிடுகின்றது. பெறுமதி இழப்பின் ஒன்றுசேர்ந்த மதிப்பீட்டு நோக்கத்திற்காக, நிதியியல் சாதனங்கள் அவற்றின் வகை, கொடுகடன் இடர்நேர்வுத் தரமிடல், ஆரம்ப அங்கீகரிப்பின் திகதி, முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலம் மற்றும் ஏனைய தொடர்பான காரணிகள் என்பனவற்றினைக் கருத்திற்கொண்டு பகிரப்பட்ட கொடுகடன் இடர்நேர்வுப் பண்புகளின் அடிப்படையில் தொகுக்கப்படுகின்றன.

எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களின் அளவிடல்

எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்கள் எதிர்பார்க்கப்பட்ட இழப்பின் பக்கச்சார்பற்ற மற்றும் நிகழ்தகவுத்தன்மை கொண்ட - நிறையேற்றப்பட்ட மதிப்பீடுகளிலிருந்து பெறப்படுவதுடன் பின்வருமாறு அளவிடப்படுகின்றன:

- அறிக்கையிடுகின்ற நாளன்று கொடுகடன் பெறுமதி இழக்கப்படாத நிதியியல் சொத்துக்கள்: நிதியியல் சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுள் காலத்தில் அனைத்து காசுப் பற்றாக்குறைகளினதும் பெறுமதி தற்போதுள்ளவாறு பயனுறு வட்டி வீதத்தினால் கழிவிடப்படுகின்றது. காசுப் பற்றாக்குறை என்பது ஒப்பந்தத்தின்படி ஊழியர் சேமலாப நிதியத்திற்கு வரவேண்டிய காசுப் பாயச்சலுக்கும் ஊழியர் சேமலாப நிதியம் பெறுவதற்கு எதிர்பார்க்கின்ற காசுப் பாய்ச்சலுக்குமிடையிலான வேறுபாடாகும்.

- அறிக்கையிடுகின்ற நாளன்று கொடுகடன் பெறுமதி இழக்கப்பட்ட நிதியியல் சொத்துக்கள்: மொத்தமாக கொண்டு செல்லப்படும் தொகைக்கு மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலின் தற்போதைய பெறுமதிக்குமிடையிலான வேறுபாடாக பயனுறு வட்டி வீதத்தினால் கழிவிடப்பட்ட தொகை.

- எடுப்பனவு செய்யப்படாத கடன்கடப்பாடுகள்: கடப்பாடுகள் எடுப்பனவு செய்யப்படாதிருக்குமாயின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு வரவேண்டிய ஒப்பந்த ரீதியான காசுப் பாய்ச்சலுக்கும் ஊழியர் சேமலாப நிதியம் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைக்குமிடையிலான வேறுபாடுகளின் தற்போதைய பெறுமதி.

- நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்கள்: ஊழியர் சேமலாப நிதியம் பெறுவதற்கு எதிர்பார்க்கும் ஏதேனும் தொகையினைக் கழித்து உடமையாளர்களுக்கு மீளச் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற கொடுப்பனவுகள்.

முன்னோக்கிய தகவல்களைப் பயன்படுத்துவது உட்பட, எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பினை ஊழியர் சேமலாப நிதியம் எவ்வாறு கணிக்கிறது என்பது மீதான மேலதிக தகவல்களுக்கு குறிப்பு 30 இலுள்ள நிதியியல் சொத்துப் பிரிவின் கொடுகடன் தரத்தினைப் பார்க்கவும்.

எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பானது, இலாபம் மற்றும் இழப்பினூடாக ஐயத்திற்குரிய படுகடன் கணக்கிற்கான ஏற்பாடுகளைப் பயன்படுத்தி அங்கீகரிக்கப்பட்டது. மற்றைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சமச்சீர் பெறுமதியில் மதிப்பிடப்பட்ட படுகடன் சாதனங்களைப் பொறுத்த வரையில் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்கள் அளவிடலானது, பெறுமானத்தேய்வில் நிதியியல் சொத்துக்களுக்கு பிரயோகிக்கப்பட்டவாறு மூன்று கட்ட அணுகுமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன்/ மற்றைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொடர்பான தொகையுடன் ஊழியர் சேமலாப நிதியம் இலாபம் மற்றும் இழப்பீட்டிலுள்ள ஒதுக்கல் கட்டணத்தினை அங்கீகரித்ததுடன் ஐந்தொகையிலுள்ள சொத்துக்களின் கொண்டு செல்லப்படும் தொகையில் குறைப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை.

3.2.1.3 நிதியியல் சாதனங்களை அங்கீகரித்தல் மற்றும் அங்கீகரிக்காது விடல்

நிதியியல் சொத்துக்கள் அல்லது நிதியியல் பொறுப்புக்கள், சாதனத்தின் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பினராக ஊழியர் சேமலாப நிதியம் மாறும்பொழுது ஐந்தொகையில் அங்கீகரிக்கப்படுகின்றன. இது பொதுவாக வர்த்தகத் திகதியில் இடம்பெறுகிறது. கடன்களும் பெறத்தக்கவைகளும் கடன்பாட்டாளர்களுக்கு முன்கூட்டியே காசு வழங்கப்படும் பொழுது (அல்லது தீர்ப்பனவு செய்யப்படும் போது) அங்கீகரிக்கப்படுகின்றன.

இலாபம் அல்லது இழப்பினூடான சமச்சீர் பெறுமதியில் அமைந்த நிதியியல் சொத்துக்கள் ஆரம்பத்தில் சமச்சீர் பெறுமதி மற்றும் நேரடியாக சேர்க்கப்பட கொடுக்கல்வாங்கல் செலவினைக் கூட்டிய தொகையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஊழியர் சேமலாப நிதியம் சொத்துக்களிலிருந்தான காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான ஒப்பந்த ரீதியான உரிமை காலாவதியாகியிருக்கும் பொழுது நிதியியல் சொத்துக்களின் காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்காக நிதியம் அதன் ஒப்பந்த ரீதியான உரிமையினை மாற்றல்செய்யும் போது நிதியியல் சொத்துக்கள் அங்கீகரிக்காதுவிடப்படுகின்றன. ஊழியர் சேமலாப நிதியத்தினால் உருவாக்கப்பட்ட அல்லது பிடித்துவைக்கப்பட்ட மாற்றல் செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்களிலுள்ள ஏதேனும் வட்டி தனியான சொத்தாக அல்லது பொறுப்பாக அங்கீகரிக்கப்படுகிறது.

ஊழியர் சேமலாப நிதியம் அதன் கடப்பாடுகளை ஆற்றும்பொழுது அல்லது ஒப்பந்தங்கள் இரத்துச்செய்யப்படும் பொழுது அல்லது காலாவதியாகும் போது நிதியியல் பொறுப்புக்கள் ஐந்தொகையிலிருந்து அங்கீகரிக்காது விடப்படுகின்றன.

3.2.1.4 எதிரீடு செய்தல்

நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுவதுடன் தேறிய தொகையானது, ஊழியர் சேமலாப நிதியம் தொகையினை எதிரீடு செய்வதற்கு சட்ட ரீதியான உரிமையினைக்

கொண்டிருக்கும் போது அத்துடன் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கான நோக்கம் இருப்பின் அல்லது சொத்துக்கள் தேறல் செய்யப்பட்டு பொறுப்புக்கள் சமகாலத்தில் தீர்ப்பனவு செய்யப்படும்பொழுது தேறிய தொகை ஐந்தொகையில் காட்டப்படுகிறது.

3.2.1.5 முக்கியமான கணக்கீட்டு எடுகோள்களும் மதிப்பீடுகளும்

ஒவ்வொரு அறிக்கையிடும் நாளன்றும் செய்யப்படுகின்ற எடுகோள்கள் அத்திகதியிலுள்ளவாறான மிகச்சிறந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் செய்யப்படுகின்றன. மதிப்பீடுகள் நம்பகரமான முறையில் அளவிடப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்காக ஊழியர் சேமலாப நிதியம் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளைக் கொண்டிருக்கின்ற போதும் உண்மையான தொகை இம்மதிப்பீடுகளிலிருந்தும் வேறுபடக்கூடும். கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் மதிப்பீடுகள் திருத்தப்படும் காலத்திலும் ஏதேனும் எதிர்கால நடவடிக்கைகளில் போதுமான காலப்பகுதியில் அங்கீகரிக்கப்படுகின்றன.

நியாயத் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களுக்குப் பயன்படுத்தப்படுகின்ற மிக உணர்வு பூர்வமான கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே குறித்துரைக்கப்பட்டுகின்றன.

சீர்மதிப்புப் பெறுமதிகளின் அளவிடல்

சீர்மதிப்புப் பெறுமதி என்பது அளவிடப்படுகின்ற திகதியில் சந்தைப் பங்கேற்பாளர்களிடையே இடம்பெறுகின்ற ஒழுங்கான கொடுக்கல்வாங்கலொன்றில் சொத்தொன்றினை விற்பனை செய்வதற்காக பெறப்படக்கூடிய விலை அல்லது பொறுப்புக்களை மாற்றல் செய்வதற்கான கொடுப்பனவாகும்.

நிதியியல் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை வகைப்படுத்துமிடத்து பெறுபேறுகள் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டுவருவதுடன் சாத்தியமானவிடத்து சீர்மதிப்புப் பெறுமதி குறிப்பிடப்பட்ட குறிப்பீடுகள் தொடர்பான விடயங்கள் மூலம் அல்லது ஊழியர் சேமலாப நிதியம் உடனடியாக அணுகக்கூடிய மிக அனுகூலமான திரவச்சந்தையின் வழங்கல் விலைகளின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. கொடுகடன் இடர்நேர்விற்கான சீராக்கமும் பொருத்தமான விதத்தில் சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ளடக்கப்படுகின்றன.

தேறிய திறந்த நிலைமைக்கான சீர்மதிப்புப் பெறுமதி என்பது தீவிரமான சந்தையொன்றில் குறிப்பீடு செய்யப்பட்ட நிதியியல் பொறுப்பொன்றில் நடைமுறை வழங்கல் விலையாகவும் நிதியியல் சொத்துக்களுக்கான குறிப்பீட்டு விலையாகவும் இருப்பதுடன் வழங்கலுக்காக வைத்திருக்கப்படும் சாதனத்தின் கூறுகளது எண்ணிக்கையினால் பெருக்கப்படுகிறது.

குறிப்பிட்ட சொத்து அல்லது பொறுப்புக்கான தீவிரமான சந்தைகள் இல்லாதவிடத்து, ஊழியர் சேமலாப நிதியமானது சீர்மதிப்புப் பெறுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு அண்மைய கட்டுப்பாடுகளற்ற சுதந்திரமான கொடுக்கல்வாங்கல்கள், கழிவுசெய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் பகுப்பாய்வுகள், தேர்வு விலையிடல் மாதிரிகள் மற்றும் ஏனைய மதிப்பிடல் உத்திகள் என்பனவற்றில் பெறப்பட்ட கொடுக்கல்வாங்கல் விலைகள் உட்பட பெறுமதி மதிப்பீட்டு உத்திகளை சந்தை நிலைமைகள் மற்றும் அறிக்கையிடும் நாளில் காணப்பட்ட இடர்நேர்வு என்பனவற்றின் அடிப்படையில் பெற்றுக்கொண்டது. அவ்வாறு செய்யும் போது, சீர்மதிப்புப் பெறுமதியானது, அவதானிக்கத்தக்க சந்தை உள்ளீடுகளின் உயர்ந்தபட்ச பயன்பாட்டினை உருவாக்குகின்ற மதிப்பீட்டு உத்திகளினதும் குறித்துரைக்கப்படும் குறைந்தபட்ச நம்பகத்தன்மையினைப் பயன்படுத்துவதன் மூலமும் மதிப்பிடப்படுகிறது.

3.2.2 சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள்

அங்கீகரித்தல்

சொத்துக்களுடன் இணைந்த எதிர்காலப் பொருளாதார நன்மைகள் நிதியத்திற்கு பாயக்கூடிய தன்மையும் சொத்துக்களின் செலவினை நம்பகமாக அளவிடக்கூடிய சாத்தியமும் காணப்படுமிடத்து சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

அளவிடுதல்

அனைத்துச் சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் ஆரம்பத்தில் அவற்றின் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. கிரயமானது சொத்துக்களின் கொள்வனவு மற்றும் அதன் பின்னரான செலவினையும் ("பின்னரான செலவுகளில்" விளக்கப்பட்டவாறு) நேரடியான காரணங்களினால் ஏற்படும் செலவினத்தையும் உள்ளடக்குகிறது. தொடர்பான சாதனங்களின் தொழிற்பாடுகளின் இன்றியமையாத விடயமான மென்பொருளின் கொள்வனவு சாதனங்களின் ஒரு பகுதியாகக் காட்டப்பட்டிருக்கிறது.

செலவு மாதிரி

